[illegible]

JL
V2,81ன N07ப
N07
142384

Reg. No. M—373.

THE

Gramathikari Gazette.

A MONTHLY JOURNAL IN TAMIL.

HAS A WIDE CIRCULATION

IN

The Tamil Districts of The Presidency

AND

A GREAT BOON BESTOWED UPON THE

VILLAGE OFFICERS.

கிராமாதிகாரி இதழ்

MADRAS, MARCH 1907.

PRINTED BY R. VENKATESWAR & Co.,

FOR THE PUBLISHER, AT THE ANANDA STEAM PRESS, MADRAS.

1907

வருஷ சந்தா ரூ. 2-2-0. தனிகாபி 0-4-0

விளம்பரம்.

மதராஸில் தகுந்த ஹைக்கோர்ட்டு வக்கீல்களிடமிருந்து வெகு பிரா ருடைய ஸிவில், கிரிமினல் முதலிய எல்லா வியவகார விஷயங்களில் உள்ள பலா பலங்களைக் குறித்து ஷாபாயின்களை யெல்லாம் விவரமாய்த்தெரிந்து கொண்டு அந்த வக்கீல்களின் அபிப்பிராயங்கள் எழுதியனுப்பப்படும். இன் னும் சென்னை ஹைக்கோர்ட்டிலும், ஸ்மால்காஸ் கோர்ட்டிலும், ஸிடிஸிவில் கோர்ட்டிலும், மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலும், ... [illegible]

... [illegible]

Apply to:— **GENERAL AGENCY,**
22, Ebramji Saib Street, MADRAS

142384

11 APR 1907 MADRAS

GRAMATHIKARI GAZETTE.

கிராமாதிகாரி கெஜட்.

மதருஸ் கவர்ன்மெண்ட் தமிழ் ஜில்லாக்களிலுள்ள கிராமாதிகா ரிகளின் நன்மையின்பொருட்டும் ஜமீன்தார் மிட்டாதார் சுரோத்ரியதாரர்களின் நன்மையின்பொருட்டும் மாதம் மாதம் வெளியிடப்படும்.

சென்னப்பட்டணம் 1907ஹு மார்ச்சுமீ 5 உ.

பத்திரிகைகள் வாசிப்பதின் பலன்.

நமது இந்துதேசத்திற்கு எத்தனையோ ஆயிரக்கணக்கான மையில்களுக்கப்பால் உள்ள பிரிட்டிஷ் தீவுகளில் (இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு, ஐயர்லாண்டு, என்னும்நமது சக்கிரவர்த்திஅவர்கள் வசிக்கும் ஆங்கிலேயதேசத்தில்) தினம்ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் வெளியாகின்றன. அப்பத்திரிகைகள் ஒவ்வொன்றும் ஆயிரம், பதினாயிரம், லக்ஷக்கணக்காக செலவழிகின்றன. தோட்டிமுதல் தொண்டமான்வரையிலுள்ளவர்கள் பத்திரிகைகள் வாங்கி வாசிக்கிருர்கள். இதேமாதிரி ஐரோபாக்கண்டத்திலுள்ள ருஷியா, ஜெர்மனி, பிரான்சு, ஆஸ்டிரியா, துருக்கி, இட்டலி முதலிய ராஜ்ஜியங்களிலும் அமெரிக்காகண்டத்தின் யுனைடெட் ஸ்டேட்ஸ், கனடாமுதலிய ராஜ்ஜியங்களிலும் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் வெளியாகி ஒவ்வொன்றும் ஏராளமாய் செலவழிந்துவருகின்றன. ஆசியாகண்டத்தில் மற்ற கண்டங்களைப்போல பத்திரிகைகள் ஜாஸ்தியாக வெளியாகிறதில்லை. நாகரீகத்தால் சிறந்தோங்கும் ஜப்பானில் கொஞ்சகாலமாய்பத்திரிகைகள் ஜாஸ்தியாய் வெளியாகின்றன. இந்தியாவிலோ சாதாரணமாகத்தான் இருக்கிறது. ஐரோப்பா, அமெரிக்காவில் வெளியாவதுபோல விசேஷமாக இல்லை. இதற்குக்காரணம் கிராமவாசிகளாயுள்ள சாமானியர்கள் வாங்கி வாசியாமைதான். கிராமவாசிகளில் சிலர் தாங்கள் என்னமோ, தங்கள் குடும்பமென்னமோ, தங்கள் சுயகாரியமென்னமோ, அதுவரைக்கும் வேண்டியவை

களை கவனித்துக்கொண்டு காலத்தைக் கண்ணியமாகக் கழிப்பவர் சிலர். லௌகிக விஷயங்களை மேற்கொண்டு தன்நடவடிக்கையால் இதராளால் மதிக்கப்பெற்று வியாபகஸ்தர்களாயும் விவகாரபுருஷர்களாயும் உலாவுவோர் சிலர். அநேகவாசிப்பினால் அகண்டகல்விக்கடலாய், புத்திசாலிகளாய் பல பத்திரிகைகளிலும், புஸ்தகங்களிலுமுள்ள விஷயங்களை அதிநுட்பமாக கிரகித்து பொதுஜன நன்மைக்கென்றே உழைத்து, பொதுநன்மைகளுக்காக அனுகூலமானவைகளை எல்லாம் அவ்வக்காலத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து பொதுஜன திருப்தியடைவித்து வருபவர் சிலர். காலையிலெழுந்ததும் கழனிவெளிக்கு நடக்கிறதும், காலைக்கடன் முடிக்கிறதும், உண்கிறதும், உறங்குகிறதுமாயுள்ளவர் சிலர். உலகம் இன்னதென்று அறியாமல் ஒருவேலையிலும் தலையிடாமல் முன்னோர்கள் தேடிவைத்த பொருளால் சுகஜீவியாயிருந்து வருபவர் சிலர். வீண்வழக்கை விலைக்குவாங்கி கோர்ட்டு கச்சேரிகளுக்கு அலைந்து திரவியத்தை வீணிலே வக்கீலுக்கும், ரெயிலுக்கும், ஹோட்டலுக்கும் செலவழித்து வருபவர் சிலர். வேதசாஸ்திரங்களோதியும், புராண இதிகாசங்கள் வாசித்தும், தேவதா பூஜைசெய்தும் பிரசங்கம் உபந்நியாசம் வித்தியாபோதனை செய்தும் வைதீகமாய் காலங்கழிப்பவர் சிலர். இவ்விதமாக பலவித மார்க்கங்களை அனுஷ்டித்து வருபவர்களுக்கும், அவரவர்கள் கொள்கைக்குத்தக்க பத்திரிகைகள் இங்கிலாண்டில் வெளியாகின்றன. நமது தேசத்தில் அவ்வளவாக பத்திரிகைகளை ஆதரிக்கிறவர்கள் இல்லாமையால் குறைவாகவிருக்கிறது.

இந்த "கிராமாதிகாரி கெஜட்" என்னும் மாதாந்திரப் பத்திரிகையானது கிராம உத்தியோகஸ்தர்களுக்கே முக்கிய உபயோகமுள்ளதாயினும் மேற்சொன்ன மற்றவர்களுக்கும் பிரயோசனப்படக்கூடியதென்பது அடியிற்கண்டபடி விளங்கும். இதில் ரிவினியூ, ஸிவில், கிரிமினல், ஜுடிஷியல், ஆப்காரி, பாரஸ்டு, மராமத்து இலாகா விஷயங்களும் விவசாயிகளுக்கு வேண்டிய பயிர்த்தொழிற் பயிற்சி, வாணிபர்களுக்கு வேண்டிய கைத்தொழில், வியாபாரவிருத்தி, விளம்பரங்கள், சுகாதாரம், ஹைகோர்ட்டு தீர்மானங்களுமடங்கியிருக்கும். ராஜ்ஜியபரிபாலனம் ஒழுங்காய் நடத்தப்படவேண்டிய விஷயத்தில் நடவடிக்கைகளைச் சுலபமாய் முடிப்பதற்கேற்றதாய் ராஜதானிகள் ஒவ்வொன்றும் டிஸ்டிரிக்ட்டுகளாகவும், தாலூக்காக்களாகவும், கிராமங்களாகவும் வகுக்கப்பட்டு (சில குக்கிராமங்கள் தவிர) ஒவ்வொரு உத்தியோகசாலை (கிராமக்கச்சேரி) ஏற்பட்டு அங்கங்கே வேண்டிய உத்தி

யோகஸ்தர்களை நேமித்து அவரவர்கள் செய்யவேண்டிய கடமைகளுக்குத் தக்கவிதிகள் ஏற்படுத்தப்பட்டு அவர்களால் ராஜ்ஜிய பரிபாலன வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு விருக்ஷம் ஜீவித்திருப்பதற்கு வேரானது எப்படி அவசியமோ அப்படியே ராஜ்ஜியபரிபாலனத்திற்குக் கிராமக்கச்சேரி ஏற்பாடானது முக்கியமானதென்பதை நாம் ஜாஸ்தியாகச் சொல்லவேண்டியதில்லை. இது சங்கதி நம்இராஜாங்கத்தாருக்குத் தெரிந்தே, சுமார் எண்பது வருஷங்களுக்குமுன்னமே சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு சில அம்சங்களில் சட்டம் திருத்தப்பட்டுமிருக்கிறது. இன்னம் கிராமபரிபாலன ஏற்பாட்டில் சட்டம் சீர்திருத்தப்படவேண்டியதாயும், கிராமபரிபாலனம் திருத்தமாய் நடத்தப்படவேண்டிய விஷயத்தில் இன்னம்சிலவிதிகள்ஏற்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவைகளுக்குப் போதுமானமுகாந்திரத்தோடு மற்றொருமுறை விரிவாய்எழுதுவோம். இவ்விதபத்திரிகைகளை கிராமாதிகாரிகள் மாத்திரமே ஆதரிக்க வேண்டுமென்பது பத்திராதிபர் அபிப்பிராயமல்ல. கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் ஆதரித்து வரவேண்டுமென்பதுதான் அபிப்பிராயம். அப்படியிராவிடினும் கிராமத்தில் பொது வரும்படியில் செலவிட்டு இப்பத்திரிகையை வரவழைத்து வேலை ஒழிந்தகாலங்களில் ஒருவர்வாசிக்க மற்றவர்கள்கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். இப்பத்திரிகைமூலமாக கிராமத்தார் அனைவரும் ஒரு இடத்தில் ஒன்றுசேர்ந்துவரக்கூடும். அக்காலத்தில் அதாவது பத்திரிகை வாசித்து முடிந்த உடனே கிராமத்திற்குவேண்டிய பொதுநன்மைவிஷயங்கள் பிரஸ்தாபத்திற்கு வரக்கூடும். குடிகள் ஒன்றுசேருதல் கஷ்டம். சேர்ந்தபின் ஒருவர் மௌனமாயிருந்தாலும் மற்றொருவர் பிரஸ்தாபம்செய்வார். அதனால் கிராமப்பொதுவிஷயங்கள் சீரடைந்துவரும். தவிர பத்திரிகைகள் வாசிப்பதால் பலவித யுக்தி, புத்தி, வியாபாரம், கைத்தொழில், நாகரீகம் இவைகளில் விசேஷபயிற்சியும் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. பல பத்திரிகைகளை வாசிப்பதினாலல்லவா ஆங்கிலேயர் ஒருவர் அபிப்பிராயத்தை மற்றொருவர் தெரிந்துகொண்டு அதற்குமேல் அவாளவாள் தங்களுக்குத் தோன்றிய யுக்திகளைச்சேர்த்துக்கொண்டு காரியஸாதனம் செய்கிறார்கள். அதுபோலவே கிராமவாசிகளும் கிராமாதிகாரி கெஜட்டை வாசித்து காரியசாதனமடைய விரும்புகிறோம். (சுபம்.)

கிராம முன்சீப்புகள்.

கிராம முன்ஸீபுகள் தங்களுக்குக்கிடைத்த அதிகாரங்களைச் சரிவர நடத்திவராததால், கிராமாந்திரங்களில் வசிக்கும் ஜனங்கள் மிகுந்த கஷ்டநஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். கிராம முன்ஸீபுகளுக்கு 20-ரூபாய்வரையில் சாதாரணமான கொடுக்கல் வாங்கல் கேஸ்களில் தீர்ப்புசெய்யவும் அத்தீர்மானத்தை நிறைவேற்றித் தீர்ப்புபெற்றவர்களுக்குத் தொகை வசூல்செய்து கொடுக்கவும், ராஜாங்கத்தாரால் அதிகார மளிக்கப்பட்டிருக்கின்றன. கிராம முன்ஸீப்புகளின் மேற்கண்ட விசாரணையால் ஸர்க்கார் முத்திரைக்கடுதாசிகளேனும், சாக்ஷிகளுக்குஸம்மன்படி, வக்கீல்களுக்கு பீஸ்களேனும், ஊர்விட்டு வெளியூர்களுக்குச் சென்று வருவதில் படிச்சிலவு வகைறாக்களிலேனும் நேரிடக்கூடிய சிலவுகள் இருகக்ஷிக்காரர்களுக்கும் கிடையாது. மேலும் தங்களிடம் வரும் வியவகாரங்களின் உண்மை விசேஷமாகக் கிராம முன்ஸீபுகளுக்குத் தெரிவது சகஜமாகும், இவ்வித ஜன நன்மையை நாடிய விஷயங்களில், அரசாங்கத்தார் செய்திருக்கும் அருமையான சட்டதிட்டங்களை அனுசரித்து அதிகாரத்தைச் செலுத்தாது தங்கள் கிராமவாசிகளை அநேக கிராம முன்ஸீபுகள் தாலூக்கா முன்ஸீபுகளிடம் அலைந்து திரியும்படி செய்துவிடுகின்றார்கள்.

மேலும் கிராமங்களில் கக்ஷிப்பிரதிகக்ஷி இருப்பது சகஜம், அவ்விதகக்ஷிகளில் கிராமமுன்ஸீபும் ஓர்கக்ஷியைச் சார்ந்தவராகவே இருப்பார். கிராம முன்ஸீபு ஒரு கக்ஷியைச் சார்ந்தவராக விருப்பாராயின், அதற்கெதிர் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் தங்கள் வியவகாரங்களை கிராமமுன்ஸீபிடம் கொடுக்க அஞ்சுவார்கள். கிராம முன்ஸீபுகளும் தாம் ஸர்க்கார் அதிகாரத்தை வகித்து, தெய்வஸம்மதமாகவும் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றியும், நியாய விசாரணை செய்வதைவிட்டு, தங்கள் கக்ஷியிற் சேர்ந்தவர்கள் மனங்களிக்க தம்மதிகாரத்தை விநியோகிப்பர். இவ்வண்ணமாக இரண்டொருவர் செய்வதைக் கொண்டு மற்றவர்களை ஜனங்கள் நம்பாமல் தங்கள்நஷ்ட கஷ்டத்தைச்சகித்து பெருத்த அதிகாரிகளாகும் டிஸ்டிரிக்ட்டு முன்ஸீபுகளிடமே தங்கள் வியவகாரத்தை நடத்தத் தீர்மானிக்கின்றார்கள். அன்றியும் நமது கிராமமுன்ஸீபுகளில் அநேகர் ஸாஸ்வத தேவியைப் பகைத்து, இலக்ஷ்மி தேவிக்குப் புத்திரர்களா யிருக்கின்றார்கள். இவர்களுக்குக் கையெழுத்துப்போடும் அதிகாரமன்றி மற்ற அலுவல்களைக் குமஸ்தாக்களே பார்க்கும்படி நேரிடுவதுமுண்டு. பின்னுஞ்சிலர் அதிக யோக்கியதையின்றி பரம்பரை பாத்தியத்தால் உத்தியோகத்தைப் பெற்றிருப்பார்கள். அவர்கள் தங்கள்முன்வரும் எந்தக் கேஸிலும். தங்களுக்குப் பிரத்தியேகமாக பீஸ்பெற்றுக்கொள்ள, வகைதேடுவார்கள்.

இவ்வண்ணம். நமது கிராமமுன்ஸீப்புகள் தக்கவர்களாகவும் நியாயமாக வழக்கையுஞ் செய்யப்பிரியமும் அவ்வண்ணமே காரியாதிகளிலும் காட்டுவர்களாகவுமிருக்கின் ஜனங்களுஞ் சுகமடைவார்கள். பெருத்த அதிகாரிகளான தாலூக்கா முன்சீப்புகளும் சவுக்கியமடைவார்கள். தற்சமயம் கிராமமுன்ஸிப்புகளில் அநேகர் தக்கவர்களாகவே நியமனமடைந்து வருகிறார்கள். அவர்களோடு பின்னும் இங்கிலீஷில் பிரவேசபரீக்ஷையிற்றேறி, கீழ்தரா சட்டப் பரீக்ஷைகளிற் றேர்ந்தவர்களையும் கிராமமுன்சீப்களாக நியமிக்கவும். சுற்றிலும் மூன்றுமைல் முதல் பத்துமைல் வரையிலுள்ள 4, 5 கிராமங்களைச் சேர்த்து, மத்தியிலுள்ள ஓர் கிராமத்தில் கிராமக்கோர்ட்டை அமைத்து, கற்

றோர்களை கிராம முன்ஸீப்களாக நியமித்தால் கிராமபரிபாலனம் சரியானபடி நிறைவேறும். அவ்வண்ணம் செய்வதனவசியமென்றால், நமது கிராமமுன்ஸீபுகள் தங்கள் திறமையையும், நிஷ்பக்ஷபாதத்தன்மையையும், ஜனங்களுக்கும், அதிகாரிகளுக்குங் காட்டி தங்களதிகாரவமைப்பை யாவருங் கொண்டாட ஜனசமூகங்களுக்கு நேரிடும் அனாவசியமான கஷ்ட நஷ்டங்களை அகற்றி வைப்பார்களென்று நம்புகின்றோம்.

கிராமாதிகாரிகளின் கஷ்டநஷ்டங்கள்.

சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாக்களில் கிராமப்பொறுப்பான உத்தியோகங்களை வகிக்கும் கர்ணம், மணியம், முன்ஸீப் இவர்களுடைய கஷ்டம் எப்படிப்பட்டது? என்பதை எவரும் அறிவது அவசியமானது. பொதுவாய் ஆலோசிக்கும்போது கிராமாதிகாரிகளுக்குள்ள வேலைப்பொறுப்பும் கஷ்டங்களும், அவர்கள் வரும்படிக்கதிகமான நஷ்டங்களும் வேறெந்த உத்தியோகஸ்தர்களுக்குமில்லை. ஆனால் நஷ்டத்திற்காகவா உத்தியோகத்தை வகித்திருக்கிறார்கள். அவர்களது காலக்ஷேபம் சம்பளத்தைக்கொண்டு நடக்கவில்லையா என்று ஒரு கேள்விபிறக்கும். அதற்குப் பதிலென்னவென்றால், சிலவிடங்களில் முன்னம் கர்ணங்களுக்குக் கிராமங்களில் ஒருவித வரும்படி ஏற்பட்டிருந்ததென்று கேள்விப்படுகிறோம். மணியம், முன்ஸீபு இவர்களுக்குச் சம்பளத்தைத்தவிர வேறு வரும்படி கிடையாது. முன்ஸீபு வேலையும் வகித்திருப்பவர்களுக்கு வரும்படியாவது சம்பளமாவது ஏற்படவேயில்லை கௌரவத்திற்காக வேலைசெய்து வருகிறார்கள். அவ்வகுப்பாருக்குச் சம்பளமில்லாவிட்டாலும் அவர்கள்பேரில் குற்றஞ்சுமத்தச் சில தாசில்தார்களுடையவும், ஸிவில், கிரிமினல், ரெவினியூ அதிகாரிகளுடைய கைகள் வெகு வேகமாய் இரவை நடத்திவருகிறது. ஆனால் யோக்கியமின்றி நடந்துகொள்ளும் முன்ஸீபுகளைப்பற்றி மேலதிகாரிகள் எழுதுவது நியாயமாகுமானையால் அதைப்பற்றி நாம் கூறவில்லை. சாதாரணமாய் ஒரு முன்ஸீபு குறிப்பிட்ட ஒருதினத்தில் ஸர்க்காருத்தியோகஸ்தருக்கு ஒத்தாசை செய்யத்தவறிவிட்டால் அதை ரிபோர்ட்டுசெய்து அதன்பேரில் விசாரணை ஏற்படுத்தி அபராதம், ஸஸ்பெண்டு இவைகளில் ஏதாவது ஒன்றைத் தாஸில்தாராவது டிவிஷனலாபீஸராவது செய்வார்கள்.

இது "புண்ணியத்துக் குழுதமாட்டைப் பல்லைப்பிடித்துப் பதம்பார்ப்பதுபோ" லிருக்கிறது. ஆனால் கவர்ன்மெண்டாருடைய உத்திரவுக்கு எவ்விதத்திலும் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை மறுக்கவில்லையாயினும், சம்பளமில்லாமல் பொது நன்மைக்காக வேலைசெய்யுமொருவனிடத்துக் சில உத்தியோகஸ்தர்கள் அதிகமாய்க் கடுமைகாட்டுவது உசிதமல்லவென்பதைமாத்திரம் குறிப்பிடுகிறோம்.

கர்ணங்களுக்கு முற்காலங்களில் மானியம், மேரை, சம்பளம் ஆக மூன்று வருவாய்களிருந்தனவென்றும் பிறகு கம்பெனியார் இராஜாங்கத்தில் மேரை கொடுப்பதை நிறுத்தி மானியத்தையும் பேரிஜ் மொத்தத்தில் வீசம் பங்கும் கொடுத்துவந்தார்களென்றும் இவர்களாதீனம் போய் மஹாராணியவர்களாதீனம் ஏற்பட்டபோது மாமூல்படி நடத்துவதாய் வாக்களித்திருப்பதாய் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் கர்ணங்களுக்குள்ள வேலையின் கஷ்டம் அதிகமாயிருக்கிறதென்றும் பின்னும் பல விபரங்களையும் கண்டு அவைகளை ஆலோசித்து பேரிஜுக்குத் தக்கபடி கர்ணங்களுக்கு மாதம் ஒன்றுக்கு

ரூபாய் இருபதுக்குக் குறையாமல் சம்பளம் உயர்த்தவேண்டுமென்று சில ஜில்லாக்களிலுள்ள கர்ணங்கள் சென்னைக் கவர்ன்மெண்டார் மூலமாக இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஒரு மகஜர் அனுப்பினார்கள். இது நிற்க, இவர்கள் வைக்கும் கணக்குகள் ஸர்க்காருக்கு மூலாதாரமானவைகள். சில தாலூக்காக்களில் கர்ணங்கள் 4 மாதமும் சில தாலூக்காக்களில் கர்ணங்கள் 5 மாதமும் தாலூக்காக்கச்சேரியில் தங்கும்படி நேரிடுவதால் ஒருவருஷத்திய சம்பளமும் செலவாகிவிடுகிறது. தாலூக்காவிலுள்ள சேவகன் வெளியேபோனாலும் தினம் ஒன்றுக்கு ஒரு அணா படியேற்பட்டிருக்கிறது. அதுகூட இக்கர்ணங்களுக்குக் கிடையாது. கர்ணம், மணியம், கிராமமுன்ஸீபு உத்தியோகங்களுக்கு இது பெரும் நியாய விரோதமென்பதை கவனிக்காமலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இதைக்குறித்து ஜில்லா அதிகாரிகளாகிய கலெக்டர்கள் கவனித்து கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்யவேண்டும்.

சாதாரணமாய் தாசில்தார்கள் நியமனத்துடனே தாலூக்கா மாஜிஸ்டிரேட்டு பவரும் எப்படி ஏற்பட்டதோ அப்படியே மணியகாரரை நியமிக்கும்போதே கிராமமுன்ஸீப் கிராமமாஜிஸ்டிரேட் பவரும் கூடவே ஏற்பட்டுவிடுகிறது. மணியம் வேலையில் குற்றஞ்செய்யின் கிராம முன்ஸீப்வேலையும் போய்விடுகிறது. சாதாரணமாக கிராமத்தில் எந்த பிச்சைக்காரன் வந்தாலும் பெரிய பிரபு வந்தாலும் முதலில் கிராமத்தலைவரைப்பார்த்து அவர்கள் சப்ளையைப் பெற்றுப்போவது சகஜமாகவிருக்கிறது. கிராம முன்ஸீயைக்காட்டிலும் அதிக ஐவேஜுள்ள குடும்பங்களிருந்தாலும், அவர்களுக்கு அதிக செலவு கிடையாது. எந்த மனுஷனும் எந்தவிடத்திலும் முதலில் கிராமமுன்ஸீபின் உதவியை நாடுகிறானென்பது யாவரும் அறிந்தவிஷயம். அதனால் கிராமமுன்ஸீபுகளுக்கு சம்பளத்திற்கு மேலுங்கூட செலவாகலாம். கிராமமுன்ஸீபுகளுக்குள்ள சங்கடங்கள் என்னவென்றால், (a) அடிக்கடி கிரிமினல் ரெவினியூ கோர்ட்டாருடைய உத்திரவுக்கு அல்லது ஸம்மனுக்குப்போக நேரிடுவதாலுண்டாகும் வண்டிசத்தம் படிச்செலவு, (b) அந்த கிராமத்தில் தங்கும் சில முக்கியஸ்தர்களுக்குச் செய்யும் சப்ளைச்செலவு, (c) கிராமத்தலைவருக்குக் கொடுத்திருக்கும் அதிக வேலைத் தொந்திரவினால் சொந்தக்காரியத்தைக் கவனிக்கவாவகாசமில்லாமல் போவதனாலுண்டாகும் காரியநஷ்டம். இதில் கிரிமினல் கோர்ட்டில் ஆஜரான நாளைக்குச் செலவுக்கு பில் (Bill) பண்ணி வாங்கலாம். அதைச் சிலர் அலக்ஷியமாய் வாங்காமலிருப்பதும் உண்டு. சிலருக்கு வாங்கலாமென்ற விபரமே தெரியாமலுமிருக்கலாம். ரெவினியூ கோர்ட்டில்மட்டில் படிகொடுக்கும் வழக்கமேற்படவில்லை. சில உத்தியோகஸ்தர்கள் தங்களுடன் வரும் சிப்பந்திகள் வேலைக்காரர்கள் இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களை கவனியாமலிருப்பதால் கிராமத்தலைவர்களுக்கு சில ஜில்லாக்களில் சங்கடங்கள் உண்டாவதுமுண்டு.

கிராமக்கோர்ட்டுகளின் ஊழல்களும், அதற்குக்காரணமும்.

சென்னைராஜதானி கிராமமுன்ஸீபுகள் ஏன் தாங்கள் செய்யவேண்டிய ஸிவில் கிரிமினல் வேலைகளைச் செய்வதில்லையென்று ஒரு கேள்வி கேட்கப்படுமானால் அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றனவென்றாலும், அவைகளிற் சிலவற்றை இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கிறோம்:—

எந்த மனிதனும் தாம் செய்யப்புகும் வேலையானது இடையூறில்லாமல் முடியக்கூடியதா? அப்படி இடைஞ்சலுண்டானால் அது சாமான்யமாக ஒழியக்கூடியதா? என்பதை முழுவதும் ஆலோசித்துக் கஷ்டநஷ்டமில்லாது செய்து முடிக்கலாமென்று தெரியவந்தால் அக்காரியத்தில் பிரவேசிக்கவும் அப்படியில்லாது கஷ்டநஷ்டமுண்டென்று தோன்றினால் அவ்விஷயத்தில் பிரவேசியாமல் பின்வாங்குவதும் சாதாரணமாகவிருக்கிறது என்பதைப்புத்திசாலிகள் ஆக்ஷேபிக்கத்தக்கதில்லை.

ஆகையால் கிராமமுன்ஸீபுகள் தாங்கள் செய்யவேண்டிய ஸிவில், கிரிமினல் வேலைகளை அவர்கள் செய்வதில் அவர்களுக்கு ஏதாவது இடைஞ்சல்கள் உண்டா? அப்படி இடைஞ்சல்கள் உண்டானால் அவைகள் சுலுவில் ஒழியக்கூடியதா? அவ்வித இடைஞ்சல்கள் எவை என்பதையும் சற்று விவரிப்போம்.

முக்கியமாய் ஒருவர் ஒருகாரியத்தை நடத்தப்புகுந்தால் அதில் சம்பந்தப்பட்ட அவயவிகள் எல்லாரும் சம்பந்தப்பட்டமட்டில் நடத்துபவருக்கு அமைந்து நடந்துகொள்ளாவிட்டால் அக்காரியத்தை நடத்த ஒருபோதும் முடியவே முடியாது.

யாதொரு கோர்ட்டு சரியாய் நடத்தப்பட்டு நியாயத்தீர்ப்புச் செய்யப்படுவதற்கும், பிறகு அத்தீர்ப்பு நிறைவேற்றப்படுவதற்கும், மத்தியில் அவசியம் செய்யவேண்டிய வேலைகள் அபாரமாக இருக்கின்றன. அவ்வேலைகளொவ்வொன்றும் அதிகார தோரணியில் நடத்தவேண்டியதாகவிருக்கின்றனவே தவிர மற்றப்படிக் கனிவாய் நடப்பிக்கக்கூடியதல்ல. எப்படியென்றால்:— (1) பிராது செய்யப்பட்டதின்பேரில் முதலில் அனுப்பப்பட்ட சம்மனை எதிரியோ, சாக்ஷிகளோ, பெற்றுக்கொள்ளமாட்டார்கள். (2) சம்மனைப் பெற்றுக்கொண்டாலும் சம்மன்படி ஆஜராகமாட்டார்கள். (3) ஆஜரானாலும் தங்கள் இஷ்டப்படி அகாலத்தில் ஆஜராவார்கள். ஆஜராகியும் ஒருவேளை அப்படியே உத்தரவன்னியிலும் அவ்விடத்தைவிட்டுப் போய்விடுவார்கள். (4) விசாரணை காலத்தில் கோர்ட்டாருக்கு நியாயப்படி அமைந்து நடந்துகொள்ளாமல் அலக்ஷியமாயும் அவமதிப்பாயும் அனாவசியமான பதில் சொல்லுவார்கள். (5) சிலர் கோர்ட்டு முன்னிலையிலேயே தங்கள் எதிர்க்கக்ஷிக்காரர்களையோ சாக்ஷிகளையோ அடித்தும் திட்டியும் இகழ்ந்தும் கோர்ட்டை அவமதிப்புச் செய்கிறார்கள். இவ்விதமான நடவடிக்கைகளை (குற்றங்களை) சில சட்டத்தேர்ச்சியுள்ள வைக்கீல்கள்கூட சப்மாஜிஸ்திரேட்டு முதலிய கோர்ட்டுகளிலுங்கூட நடத்திவருகிறார்கள். அப்படிப்பட்ட சப்மாஜிஸ்திரேட் முதலிய அதிகாரிகளுக்கு இவ்விஷயங்களில் போதுமான அதிகாரங்கள் சுயமாய்க் கொடுக்கப்பட்டிருந்தும் சம்மந்தப்பட்ட வைக்கீல்கள் சட்டம் தெரிந்தவர்களாயிருந்தும் அவர்களே பலசமயங்களில் ஒழுங்கீனமாய் நடந்துகொள்ளுகிறார்களென்றால் அவ்விஷயங்களில் சுயமான அதிகாரம் கொடுக்கப்படாத கிராமமுன்ஸீப்புகளிடத்தில் சட்டமேதெரியாத முரட்டுத்தனமுள்ள கிராமவாசிகள் அப்படி ஒழுங்கீனமாய் நடந்துகொள்ளக்கேட்பானேன்? தவிர கிராமாந்திரங்களில் இரண்டொரு போக்கிரிகள் (அயோக்கியர்கள்) இருப்பார்கள், அவர்கள் இவ்விதமான ஒழுங்கீனங்களை இவ்விதக்கட்சிக்காரர்கள் செய்யும்படி அவர்களுக்குத் துற்புத்தி கூறுவார்கள். அதன் பயனாக பிரஸ்தாபக் குறைவுகள் அடிக்கடி நடந்து வரலாம். அப்படிப்பட்ட குற்றச்செய்கை

கள் இப்போதைய நிலைமையில் நடந்தால் அது விபரத்தை தாலூக்கா மாஜிஸ்திரேட்டுகளுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது. அப்படி ரிபோர்ட்டு செய்வதின்பேரில் கிராம முன்சீபானவர் தாம் எழுதிய ரிபோர்ட்டுக்கு சாக்ஷிகளை தேடவும் அச்சாக்ஷிகளுக்கு படிச்சிலவு செய்தும் தானும் பிரயாணச் சிலவு உள்பட ஏராளமான சிலவுசெய்து சப்மாஜிஸ்திரேட்டுகளின் இஷ்டப்படி பல சாங்கிகாலங்களில் 20, 30 மைல் அலைந்து கஷ்டப்பட்டு ருஜு கொடுத்தாலும் சப்மாஜிஸ்திரேட்டுகளுக்கு உண்டாகும் எண்ணத்தின் வேறுபாட்டினால் சில சமயம் கேஸ் பயனடையாமலும் போய்விடுகிறது. ஒருவேளை தண்டனையானாலும் குற்றவாளிகளுக்கு ரூபாய் 1, 2 அபராதம் விதிக்கப்படும். இதற்குள் ரிபோர்ட்டு செய்த கிராமமுன்சீபுக்கு படிச்சிலவு வகையறாவில் ரூபாய் 10, 20 நஷ்டமும் பலநாள் அலைந்ததில் காலவிரயமும் அபாரசிரமமும் உண்டாகும், தவிர இவ்விதமான கேஸ்கள் விசாரணையாகும் மேற்சொன்ன மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுகளில் கிராமமுன்சீபுகளையும் அவர்களை அலக்ஷியம் செய்த கக்ஷிக்காரர்களையும் சமமான அந்தஸ்தில் நிற்க வைக்கிறார்கள், எவ்வித குற்றமும் தான் செய்யாதிருக்கும் நிலைமையில் கேவலம் தன்னை அலக்ஷியம் செய்த கக்ஷிக்காரனும் ஒரு கோர்ட்டுக்கு ஜட்ஜாக விருந்த கிராமமுன்சீபும், இதர கோர்ட்டில் சரியான அந்தஸ்தில் கக்ஷிக்காரராக நிற்பதென்றால் இதைவிட வெட்கம் வேறென்னவிருக்கிறது? போலீஸ் ஸ்டேஷன் ஆபீஸர்களுக்கு (ஹெட் கான்ஸ்டேபில்) மாஜிஸ்திரேட்டுகள் தங்கள் கோர்ட்டுகளில் ஆஸனம் கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்ட் ஆர்டர் புதிதாக ஏற்பட்டு அந்தப்படி நடந்துவரும் இக்காலத்தில், கிராம மாஜிஸ்திரேட்டுகளுக்கு ஏன் ஆஸனம் கொடுக்கக்கூடாது? கிராம மாஜிஸ்திரேட்டுகள் பொதுவாய்ப் போலீஸார்களைக் காட்டிலும் அந்தஸ்துள்ளவர்களென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே, அவர்கள் விஷயத்தில் இப்படி நடந்துகொள்வது முழுமையும் அநியாயமும் அகௌரவமுமான காரியம்.

கிராம கோர்ட்டுக்குரிய ஸிவில் சட்டங்கள்.

மதருஸ்.

(1) 1816௵த்திய 4, 5, 12-வது ரெகுலேஷன்கள்.
(2) 1840௵த்திய சென்னப்பட்டணம் 8-வது ஆக்ட்
(3) 1883௵த்திய ஷை 4-வது ஆக்ட்
(4) 1889௵த்திய ஷை 1-வது ஆக்ட்

இவைகளெல்லாம் கிராம உத்தியோகஸ்தர்களுக்காக அதிகாரங்களை வெளியிடுகின்றன. 1816௵த்திய 4-வது ரெகுலேஷனும், 1883௵த்திய 4-வது ஆக்ட்டும், 1889௵த்திய 1-வது ஆக்ட்டினால் ரத்துசெய்யப்பட்டு இப்போது ஷை 1-வது ஆக்ட்டு அமுலிலிருந்துகொண்டிருக்கிறது. 1816௵த்திய 5, 12-வது ரெகுலேஷன்கள் ரத்தாகவில்லை, இந்த இரண்டும் கிராம பஞ்சாயத்துக்குரிய விதிகள் அடங்கியிருக்கின்றன. 1904௵ நவம்பர் மீத்தில் நடந்த சென்னப்பட்டணம் லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் மீட்டிங்கில் கிராம முன்சீப் கோர்ட்டுக்குரிய சட்டவிதிகளையும், கிராமபஞ்சாயத்துக்குரிய சட்டவிதிகளையும், திருத்துவதற்கான திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. சுமார் 88-வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்ட ஒரு சட்டத்தை

1889-வது ஆக்ட்டு பிறப்பித்தகாலத்தில் கவனியாமல் அப்போது திருத்த கவர்ன்மெண்டார் உத்தேசித்தார்கள். இது இந்தியர்கள் வீணிலே தங்கள் பணத்தை கோர்ட்டு வியவகாரங்களில் வைக்கீல்களுக்கும், ஸ்டாம்புக்கும் சொரிந்து ஏழைகளாகிவிடுகிறார்கள் என்று நமது கவர்னர்ஜெனரலாகிய லார்ட் கர்ஸன் அவர்கள் கொண்ட அபிப்பிராயத்தை அனுசரித்ததாக விருக்கிறது. முக்கிய கருத்தியாதெனில் இந்நாட்டு ஜனங்கள் தங்கள் கிராமத்திலேயே தங்களுக்கு வேண்டிய பந்துக்கள், சிநேகிதர்கள், முதலானோரைக் கொண்டு கிராமபஞ்சாயத்து ரெகுலேஷன்படி பஞ்சாயத்து கோர்ட்டு ஏற்படுத்தி கிராமமுன்சீபையும் கூடவைத்துக்கொண்டு தங்கள் வியவகாரங்களைப் பணச்சிலவின்றி பைசல் செய்துகொண்டு தற்காலம் வியாஜ்ஜியமாடுவதிலேயே சொத்துக்களை அழித்து ஆண்டிகளாகாமல் சுகமடைய வேண்டுமென்பது. இம்மசோதா, கிராம முன்சீபுகளும், கிராமபஞ்சாயத்தாரும் செய்த தீர்ப்புகளின்படியே கட்சிக்காரன் கட்டுப்பட்டு நடக்கும்படியான விதிகளையும் ஏற்பாடுகளையும் செய்வதற்காக தயாரிக்கப்பட்டதாய் வெளியாகிறது. சில கிராமங்கள் சென்னைராஜதானியிலுள்ள நியாயாதிபதிகளாயுள்ள டிஸ்டிரிக்ட்டு முன்சீபுகளின் அதிகார எல்லைக்குள் இருக்கவில்லையென்பதை அறிந்தே அப்படிப்பட்ட கிராமங்களிலிருக்கும் கிராம முன்சீபு கோர்ட்டுகளும் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளும், செய்யும் தீர்ப்புகளை எந்த டிஸ்டிரிக்ட்டு முன்சீபுகள் நிறைவேற்றுகிறதென்று ஏற்பட்டிருக்கவில்லையாதலால், அந்த அதிகாரத்தை அந்தந்த கிராமங்கள் எந்தெந்த ஸப்ஜட்ஜியின் அதிகார எல்லைக்குள்ளிருக்கிறதோ, அந்த ஸப்ஜட்ஜிக்காவது அப்படி ஸப்ஜட்ஜியின் அதிகார எல்லைக்குள் இல்லாத பக்ஷத்தில் டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜிக்காவது கொடுப்பதென்று தீர்மானித்தார்கள். டிஸ்டிரிக்ட்டு முன்சீபின் அதிகார எல்லைக்குள் அடங்காத கிராமங்கள் ஒன்று, இரண்டிருந்தாலும் அவைகள் அந்த கிராமங்கள், எந்த தாலூக்காவுக்கு சம்பந்தப்பட்டதோ, அந்த தாலூக்காவின் மற்ற கிராமங்கள், எந்த டிஸ்டிரிக்ட்டு முன்சீபின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கிறதோ அதே டிஸ்டிரிக்ட்டு முன்சீபு அதிகாரத்திற்கு உட்படுத்தினால் குடிகள் சுகமடைவார்கள்.

சொற்பத்தொகைகளைப் பற்றிய தீர்ப்புகளை நிறைவேற்ற ஒருவன் ஸப்கோர்ட்டு, டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு உதவியைத் தேடவேண்டுமானால் எவ்வளவோ தொல்லை, பணச்சிலவு, காலதாமதம் நேரிடுகிறது. இவைகளுக்குப் பயந்தே குடிகள் கிராமகோர்ட்டு, பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்குப் போகாமல் சுலபமாய் தீர்ப்பை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று டிஸ்டிரிக்ட்டு முன்சீபுகோர்ட்டுகளுக்குப் போகிறார்கள். இவ்வேற்பாட்டினால் பாதிக்கப்பட்ட கிராமத்தார் தங்கள் ஆக்ஷேபங்களை நானபிஷியல் மெம்பர்கள் துவாராவாக சட்ட நிரூபண ஸபைக்குத் தெரிவித்துக்கொண்டால், நமது காருண்ய கவர்ன்மெண்டார் இதை கவனிப்பார்கள்.

கிராம பஞ்சாயித்து ரெகுலேஷனும் மதறாஸ் வில்லேஜ் கோர்ட்டு சட்டமும்:—இந்த ஆக்ட்டு சீர்திருத்தம் செய்வதின் முக்கிய கருத்து என்னவெனில் முன்னாடியே ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டதிட்டங்களை மாற்றுவதற்காகவாவது அனுஷ்டானத்திலுள்ளவைகளை குறைப்பதற்காகவாவது இல்லை. கிராம முன்சீபு கோர்ட்டிலும், கிராம பஞ்சாயத்தார்களும் பிறப்பிக்கிற தீர்ப்புகளை நிறைவேற்றவேண்டிய விஷயத்தைப்பற்றியே ஆலோசனை நடந்தது.

ஷெ கிராமங்கள் எந்த டிஸ்ரிக்ட்டு முன்ஸீபினுடைய பரிசீலனைக்குட்பட்டிருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்ட்டு முன்ஸீபுகளே நிறைவேற்றவேண்டிய வேலையை முடிக்கவேண்டுமென்றும் திட்டம் செய்தார்கள். நீலகிரி ஜில்லாவைச்சேர்ந்த குன்னூர் உதகமண்டலம் தாலூக்காக்களிலுள்ள சில கிராமகோர்ட்டுகளின் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு அவ்விடம்முன்ஸீபுகோர்ட்டில்லாததால் சங்கடமுண்டாய் அதன் நிவர்த்தியின்பொருட்டே ஆலோசனை நடந்து நீலகிரியிலுள்ள ஸப்ஜட்ஜையே வில்லேஜ் கோர்ட்டு தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்காக டிஸ்டிரிக்ட்டுமுன்ஸீபாக உத்தேசித்துக் கொள்ளப்படுமென்று கௌன்ஸிலர்கள் முடிவுசெய்து மகாகனம்பொருந்திய கவர்னரவர்களும் அங்கீகாரம் செய்துகொண்டார்கள்.

ரெவினியூ அதிகாரம்.

சிறந்தோங்கி மாட்சிமைகொண்ட நம் சென்னைராஜதானியின் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள அநேக தாலூக்காக்களின் ஆயிரக்கணக்கான கிராமங்களிலே அந்தந்த கிராமத்தின் கவர்னராக விளங்கும் கிராமாதிகாரிக்கும் இப்படிப்பட்ட கிராமங்கள் எத்தனையோ அடங்கியுள்ள தாலூக்காவின் தலைமையாக விளங்கும் தாசில்தாருக்கும் இடையிலே விளங்கி இவர்களுக்குண்டாயிருக்கும் அதிகாரத்தோரணைகளைப் பொருத்திக்காட்டி அதன் காரணமான சம்பந்தத்திற்கு ஒரு சங்கிலித் தொடர்போல விளங்கு முத்தியோகஸ்தருக்குத்தான் ரெவினியூ இன்ஸ்பெக்டர் என்று பெயர். கீழ் அதிகாரிகளிலே முக்கியமானவர்களில் இவர் ஒருவர். நன்றாய் யோசித்துப்பார்க்கும் பக்ஷத்தில் கிஸ்திவசூல் விஷயத்திலும் சாகுபடி விஷயங்களிலும் மேலதிகாரிகள் கவனத்திற்குக்கொண்டுபோகக்கூடிய அநேக ரிபோர்ட்டுகளின் சரியானமாதிரி ரெவினியூ இன்ஸ்பெக்டரைப் பொருத்ததாகவும் இவர் ஜாக்கிறதையாகவும் கவனிப்பாகவும் பார்க்கவேண்டியதாகவு மிருக்கிறது. மாமூலாயிருக்கிற சில தானியங்களின் அளவைப்பற்றியோ, பயிர் செய்யப்பட்டிருக்கிற நிலங்களின் விஸ்தீர்ணத்தைப்பற்றியோ, ஆடுமாடுகளின் கொள்ளைநோய்களைப்பற்றியோ இன்னும் இப்படிப்பட்டவைகளில் எதைப்பற்றியாவது தெரிந்துகொள்ளும்படி கவர்ன்மெண்டார் அவர்களிடமிருந்து யாதாவது கேழ்வி பிறக்கும்பக்ஷத்திலே ரெவினியூ போர்டிலிருந்து இதைப்பற்றிய ஆர்டர் ஒன்று ஜில்லா கலெக்டருக்கு அனுப்பப்படுகிறது. அந்த கலெக்டர் அதை டிவிஷனலாபீஸருக்கு அனுப்புகிறார். அவர் அதை தாசீல்தாருக்கனுப்பவும் தாசீல்தார் அதை ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்புகிறார். சாதாரணமாக இந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர் அதற்கு வேண்டிய தகவல்களையெல்லாம் கிராமாதிகாரிகள் மூலமாகச் சேகரித்து அனுப்பவும் அவைகளிலிருந்து தான் கவர்ன்மெண்டு ரிபோர்ட்டுகள் தயாராகின்றன. சாகுபடி தாவியாய்ப்போகவும் அதைப்பற்றி உழுது பயிர்செய்கிறவொருவன் முறையிட்டாலும் சரி, அல்லது கிராமாதிகாரியின் அக்கிரமமான நடவடிக்கையைப்பற்றி பிராது கொடுத்தாலும் சரி இந்தப் பிராதைச் சாதாரணமாய்க் கலெக்டர் அல்லது டிவிஷனலாபீஸர் தாஸீல்தாருக்கனுப்பவும் அவரதை ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கனுப்புகிறார்.

ஒவ்வொருதாலூக்காவிலும் இரண்டு அல்லது மூன்று ரெவினியூ இன்ஸ்பெக்டர்களிருக்கிறதுண்டு. இவர்களுக்கென்று பிர்கா (Firkha) அல்லது டிவிஷன் ஏற்பட்டிருக்கிறது. இந்த பிர்கா அல்லது டிவிஷனிலடங்கிய கிராமங்களும் அவைகளின் அதிகாரிகளும் இந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள்தான். இவர் ஷெ கிராமங்களைப் பார்வையிடும்படி ஸர்க்கூட்டில் போகும்போது அந்தந்த கிராமத்தில் இவர் போயிறங்கின்றும் அந்தக் கிராமத்தின் அதிகாரிகள் எல்லாம் இவரிடம் ஆஜராகி இவர் கேழ்க்கும் கேள்விகளுக்கு உத்தரவு சொல்லவேண்டும், இப்படி ரெவினியூ இன்ஸ்பெக்டர் தன் பிரக்காவுக்குள்ளடங்கிய பிரதி கிராமத்தையும் போய் இன்ஸ்பெக்ஷன் செய்து (பார்வையிட்டு) திரும்பவேண்டும். அப்படி ஒவ்வொரு கிராமத்தையும் பார்வையிடும்போது முக்கியமாய் நிலங்களில் விளைச்சல் எப்படியிருக்கிறதென்று பார்க்கவேண்டும். குளம் சுத்தமாயிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். மழைபெய்ததின் அளவைக் கவனிக்கவேண்டும், கிஸ்தி வசூலின் ஸ்திதியைப் பரிசீலனைசெய்து கிராமக்கணக்குகள் சரியாய் வைக்கப்பட்டிருக்கிறதாவென்று பார்த்துக்கொண்டு ஜமாபந்திக்கு முன்னே சில நிலங்களை அளவிட வேண்டுமென்பது கூட அவரைப் பொருத்ததுதான். நிலம் சாகுபடியாகாததைப்பற்றியாவது அல்லது ஜலக்குறைவு, சாகுபடி தாவியாய்ப் போனதைப்பற்றியாவது, அல்லது அதிக மழையினாலும் வெள்ளத்தினாலும், குருக்குத்தி (பயிரழிவு) யினாலும் உண்டான நஷ்டத்தைப்பற்றியாவது பிராதுகளுண்டானால் ரெவினியூ இன்ஸ்பெக்டரானவர் ஷெ நிலங்களை நேரில்போய் பார்வையிட்டு தன்னுடைய ரிபோர்ட்டை மேலதிகாரிக்கு அனுப்பவேண்டும். இப்படி இதனால் ரெவினியூ இன்ஸ்பெக்டரானவர் ஒரு முக்கியமான ஆபீஸர் என்றும் இவரிடத்தில் குடிகளுக்கு அதிக மரியாதையும் விசேஷ மதிப்புமுண்டென்றும் தெரியவருகிறது. இப்படிப்பட்ட பொருப்புள்ள வேலைகளை வகிக்கக்கூடியவர் நல்லபாலியமாயும் சுறுசுறுப்புள்ளவராகவும், நன்றாக வாசித்தவராயும் ஞானங்கொண்டவராயு மிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் சில சமயங்களில் விருத்தாப்பியம் சுறுசுறுப்பின்மை, காரியத்தை நடத்திக்காட்ட போதுமான சக்தியில்லாமை இவைகளையுடையவர்கள் வரும்படியாய் நேர்ந்துவிட்டாலோ அந்த டிவிஷனுக்கோ பிர்க்காவுக்கோ வேலைகள் சரியாய் நிறைவேறமாட்டா. அடிக்கடி பிராதுகள் கிளம்பிக்கொண்டே யிருக்கும். அதனால் அந்த டிவிஷனில் கலகமிராமலிராது. சில காலம் ரெவினியூ இன்ஸ்பெக்டராக வேலையிலிருந்திராதவரை தாசில்தாராக நியமிக்கக்கூடாதென்று ஒரு ரூல் ஏற்படுவது நல்ல விஷயம்தான். அநேக வருஷங்களாக கிளார்க்காக வேலைபார்த்துவந்தபிறகு அந்த ஒருவரைத் தாசில்தாராக நியமிக்கப்பட அடிக்கடி நேரிடுகிறது. இந்த அந்தஸ்தில் அவர் தன் வேலையைச் சரிவர நடத்திவந்திருக்கலாம் எல்லாவிதமான பரீக்ஷைகளிலும் தேறியிருக்கலாம். மொத்தத்தில் ஆபீஸ்வேலையில் தேர்ச்சியடைந்திருக்கலாமேயல்லது தேசத்தின் வளமையையும் அறிவிருக்கும் குடிகளின் மாதிரியையும் குணாதிசயங்களையும் பழகித் தெரிந்துகொள்ளப்போதிய அனுபவத்தை யடைவதற்குச் சாவகாசமில்லாதவராகி இதன் பலனாக தனக்குத் தாசில்வேலை கிடைத்தபோது அடிக்கடி அநேக தப்புகள் செய்தும் ஒருவேளை கஷ்டமும் நேர்ந்துவிடும். வாலிபச் சிறுவர்களை இரண்டு மூன்று வருஷம் ரெவினியூ இன்ஸ்பெக்டராக வேலை செய்யும்படியாக நியமிப்பதால் அவர்கள் அநுபூர்வமாக அநேக விஷயங்களை விஸ்தாரமாகத் தெரிந்துகொள்ள

கிறார்கள். அது அவர்களுக்குப் பின்னிட்டு அதிகபலனைக் கொடுக்கும். மற்றபடி உபயோகமற்ற குமஸ்தாவை இந்தச் சிறந்த உத்தியோகத்திலமர்த்தி இந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர் வேலையை இப்போது இருக்கிறதுபோல அடிக்கடி பார்க்கப்படுவதிலும் நல்லபடிப்போடு தங்களால் செய்துமுடிக்கக் கூடிய முக்கியமான வேலையைச் செய்ய அதியுக்தமான இளமைப் பருவமுடையவர்களும் கெட்டிக்காரருமானவர்களைக் கொள்ளலாம். ரெவினியு இன்ஸ்பெக்டர்கள் கிராமத்தார் சபைகளிலே கலந்துகொண்டு தன்னுடைய சாய்காலைச் செலுத்தி பணமும் மற்ற காய்கறிபண்டங்களும் அவர்களிடமிருந்து பெறலாமே. கிராமத்தார்களும் அநேக பெரிய விஷயங்களிலெல்லாம் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களின் ரிபோர்ட்டுகளைப் பொருத்ததென்று தெரிந்தவர்களாதையால், அவர்கள் சந்தேகமில்லாமல், ரெவினியூ இன்ஸ்பெக்டர் தயவை நாடி அவாவோடே தயாராயிருப்பார்களென்று சொல்லலாமே? இப்படிப்பட்ட சந்தேகங்களுக்கெல்லாம் இடங்கொடாதபடி ரெவினியூ இன்ஸ்பெக்டராக வருகிறவர் போதுமான யோக்கியதை யுடையவராகவே இருப்பதாகத் தான் அபிப்பிராயப் படவேண்டும், என்பதற் றடையென்ன இருக்கிறது.

வயது சென்றவர்களை விட நன்றாக வாசித்த சிறுவர்களையே நியமிப்பது அதிக நன்மையைத் தருமென்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். எப்படியென்றால் சிறுவர்களுக்கோ ஸம்ஸாரபாதைகிடையாது, அதனால்பணத்தாசையில் அவ்வளவாக ஆசைவைக்கமாட்டார்கள். வயது சென்றவர்களுக்கோ அப்படியல்ல; சாதாரணமாக அவர்கள் பெரிய குடும்பபாரத்தைச் சுமந்தவர்களாய் அதன் ஆதரிப்பின் பொருட்டு தங்கள் சொற்பசம்பளம் போதாது என்று சட்டத்துக்கு விரோதமாக இனும் வரிசைகள் பெறுவது ஒரு பேராச்சரியமாகமாட்டாது. வாலிபர்க்கோ இப்படிப்பட்ட அவாவுக்கு இடமில்லை. இயற்கையாகவே கைநீட்டாமல் கண்டிதமாய் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு தாங்கள் விருத்திக்கு வரவேண்டிய ஆதரவின் அபிவிர்த்தியை நாடுவார்கள். சட்டத்துக்கு விரோதமான மாதிரியாக காசுபறிப்பதற்கு அநேகவழிகளுண்டு. சில ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் பட்டாக்களை அவரவர்களுக்குக் கொடுக்கும்போது பிரதி பட்டாதாரரையும் ஏதோ நாலணா, எட்டணா கொடுக்கும்படி செய்து கொள்ளலாம். இதுவுமல்லாமல் குடித்தனக்காரரால், தங்கள் பேரில் பொய்க்கேஸ்கள் வந்துவிடும் என்ற பயத்தினாலே பணமோ அல்லது காய்கறிபண்டங்களோ கொடுக்க நேரிடலாமல்லவா? இன்னம் இதரகேஸ்களிலேகூட அவைகள் உண்மையாக நடந்தவைகளானாலும் அப்படியே ஒன்றுமில்லாததாக்கிவிட்டு மேற்கூறியவைகளைப் பெறலாமே. இப்படியெல்லாம் நடப்பதாயிருந்தாலோ இவைகளெல்லாம் ஜனங்களுக்குப் பெரும்பாரமாகி தேசத்தின் சரியானவும் நியாயமானவுமான நடவடிக்கைகளுக்கு இடையூறுண்டாகும் என்பதற்குத் தடையென்ன? இத்தியாதி காரணங்களையும் நன்றாக அறிந்தவர்களாகத்தான் ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் தேசத்தின் க்ஷேமம் அவ்வளவும் தங்களுடைய யோக்கியதையைப் பொறுத்ததாகஎண்ணித்தான் தாங்கள் செய்கிற வேலைகளில் ஒருவிதமான வைராக்கியத்தையும், கெட்டிக்காரத்தனத்தையும் காட்டி மேலானவும் மிகவு முக்கியமானவுமான தாசில்தார் டிப்டிகலெக்டர் வேலைகளுக்கு ஒவ்வொருவிதத்திலும் லாயக்குடையவர்களாக எடுத்துக்காட்டும்படி முயலுவார்களாக.

ஸிவில் நடவடிக்கைகளின் விவரிப்பு.

பிரியாதைக் கக்ஷிக்காரரால் தெளிவாய்க் கிராமத்தில்வழங்குகிற பாஷையில் எழுதி அதில் வாதி கையெழுத்திட்டு கிராமமுன்ஸீபுக்கு நேரில் கொடுபடவேண்டும். கிராமமுன்ஸீபானவர் அப்படிக்கொடுக்கப்பட்டபிரியாது சரியான மாதிரியாகக் கோர்ட்டின் நிபந்தனைகளையும் சட்டங்களையும் அநுசரித்துக் கொண்டுவரப்பட்டிருக்கறது தானென்றும் அந்தப்பிராது சம்பந்தப்பட்ட கிராமமுன்ஸீப் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப் பட்டதாவென்றும் பிராதில்பிராது கொண்டுவந்தவனால் இன்னம் ஏதாவது திருத்திக்கொடுக்கவேண்டியதிருக்கிறதாவென்றும், பிராதுகொடுத்த தேதியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தேதியிலிருந்து கால நிர்ணய சட்டப்படி மூன்றுவருஷ காலாவதி காலத்துக் குள்பட்டதுதானென்றும் இன்னம் இவைபோலொத்தவைகளில் கவனிக்கவேண்டியவைகள் எல்லாம் சரியாயமைக்கப்பட்டிருக்கிறதாவென்றும் ஆலோசிக்கவேண்டியது. இப்படிக் கவனிப்பதில் ஏதாவது அப்படிப்பட்ட குறைகள் ஏற்படுமானால் அவைகளைத் திருத்தி கோர்ட்டில் மறுபடியும் தாக்கல்செய்யவேண்டியதென்று தோன்றினால் அவைகளைப் பிராதின்பேரில் சுருக்கமாக எழுதி எண்டார்சுசெய்து திருத்தி அல்லது வேறே புதிதாக எழுதிக்கொடுக்க மூன்றுநாளோ அல்லது கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிற நாட்கள் கெடுவுகண்டு எழுதி அதைப்பிராது கொடுத்தவனிடம் திருப்பிக்கொடுத்துவிடவேண்டியது. பிராது ஏதாவது திருத்தவேண்டியதாயிருந்து பிராதை வாபசுசெய்யும் விஷயத்தில் அடியிற் கண்டிருக்குமாதிரியாக எழுதவேண்டும்:—எண்டார்சு:—இந்த விண்ணப்பம் அர்த்தமாகக்கூடியதாய் தெளிவான நடையில் எழுததாததினால் வாபசு செய்யப்பட்டது. இதைப் புதுப்பித்து நாலு நாளைக்குள்ளாக தாக்கல் செய்யவேண்டியது.

கிராமமுன்ஸீப் கோர்ட்,

.........190 . கிராமமுன்ஸீப்.

பிழையை வாதி திருத்திக்கொடுத்தபிறகு அதின் சுருக்கமான அம்சங்களை கீழே கண்டிருக்கும் விதமாய் ஓர் ரிஜஸ்டரில் பதிந்துகொண்டு அந்தப் பிராதின் மேற்புறத்திலுள்ள எண்டாரஸ்மெண்டிலும் பிராதின் தலைப்பிலும் ஷை கோர்ட்டின் 1907 ம் வருஷத்திய ஸிவில் நம்பர் என்றிருக்கிறதற்குத் தொடர்ச்சியாகவருஷம்ஆரம்பமுதல்நம்பர்கொடுக்கவேண்டியது. திருஷ்டாந்தம்:—

ஆம்பாக்கம் கி. மு. கோர்ட்டு 1907-வருஷத்திய ஸிவில் நம்பர் 4 இந்தப்படி நம்பர்போட்டு பிராதின்பேரில் "பைல் செய்து கொள்ளப்பட்டது" என எழுதி கிராமமுன்ஸீப் கையெழுத்து செய்யவேண்டியது. அப்படி பிராதை பைல் செய்தபிறகு வியாச்சியத்தை விசாரிப்பதற்காக ஒருதினத்தைக் குறிப்பிட்டுக் கிராமக்கோர்ட்டார் அடியிற்கண்ட மாதிரியாக (பாரப்படி) பிரதிவாதி ஆஜராகித் தாவாவிற்குச் சரிசொல்லவேண்டுமென்றெழுதிய சம்மன் மூலமாகப் பிரதிவாதிக்குக் கட்டளை பிறப்பிக்கவேண்டும். அப்படி பிறப்பிக்கப்பட்ட ஸம்மனுடன் காப்பியும் பிரதிவாதிக்குச் சேர்க்கப்படுவதற்காகக் கொடுக்கவேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட பிரதிவாதிகளிருந்தால் ஒவ்வொரு பிரதிவாதிகளுக்கும் தனித்தனி ஒவ்வொன்று கொடுபடுவதற்காக அவ்வளவு ஸம்மன் நகலும் பிராதுகாப்பியும் கொடுக்கவேண்டும். ஆனால் அசல் ஸம்மன் மட்டும் ஒரு பிரதி போதுமானது. திருஷ்டாந்தம்:—ஒரு நம்பரில் ஒரு பிரதிவாதியானால் அஸல் சம்மன் 1, ஸம்மன் நகல் 1, பிராது காப்பி 1. மற்

ஒரு நம்பரில் 5 பிரதிவாதிகளிருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். அந்த நம்பருக்கு அஸல் ஸம்மன் 5, ஸம்மன் நகல்கள் 5, பிராது காபிகள் 5 கொடுக்கவேண்டியது. ஸம்மன் நகல்கள் மாத்திரமே கிராமமுன்ஸீப்கள் எழுதவேண்டியது. பிராது நகல்களெல்லாம் பிராது கொடுக்கும்போதே வாதியால் தாக்கல் செய்யவேண்டிய தாகையால் கிராமமுன்ஸீபுகள் வேறு நகல்கள் எழுதியனுப்ப வேண்டியதில்லை. வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பிராது காபியை ஸம்மனுடன் அனுப்பவேண்டியது. மேற்கண்ட விதமாக தயாரிக்கப்பட்ட ஸம்மனை பிரதிவாதிக்குச் சேர்ப்பிக்கவேண்டியதற்காகப் பிராது காப்பியுடன் கொடுக்கவேண்டியது, அப்படி ஸம்மன் கிராமச் சேவகனிடம் கொடுக்கும்போது அஸல் ஸம்மன்பேரில் எண்டார்சு உத்திரவுமெழுதி கி. மு. கையெழுத்தும் போடவேண்டியது. பிராதுடன் சாக்ஷி ஜாப்தாவும் ஆதரவு ஜாப்தாவுடன் தஸ்தாவேஜையும் தாக்கல்செய்யவேண்டியது.

ஸம்மன்,

1889-ம் வருஷத்திய I வது ஆக்ட்டு 25 வது பிரிவு.

ஆம்பாக்கம் கிராம முன்ஸீப் கோர்ட்டாரவர்கள்

ஆம்பாக்கம் ராமஸ்வாமி அய்யங்காரின் குமாரர் கிருஷ்ணஸாமி அய்யங்காருக்கு

இதனால் கட்டளையிடுகிற தென்னவென்றால்:—

ஷை கி. மு. கோர்ட்டு 1907 ம் வியாச்சிய நம்பர் 4.

ஆம்பாக்கம் நாராயணய்யங்கார்....................வாதி.

ஷை கிருஷ்ணஸாமி அய்யங்கார்.......பிரதிவாதி.

பிரதிவாதியாகிய உம்முடையபேரில் வாதியால் ரூ.13-7-0 க்கு நம்முடைய கோர்ட்டில் செய்யப்பட்டிருக்கிற பிரியாது சங்கதி விசாரணையில் உமக்குள்ள ஆக்ஷேபணையைத் தெரிவித்துக்கொள்ள நாளது மேமீ 24 ந்தேதியில் பகல் 11-மணிக்கு ஆம்பாக்கம் கிராமக்கச்சேரி கட்டடமுகாமில் நம்முன்பாக நீர் நேரேயாவது, அல்லது கிரமமான அதிகாரம்பெற்ற ஏஜண்டு மூலமாயாவது ஆஜராகவேண்டியது. அப்படி ஆஜராகாவிட்டாலும் ஆஜராகி உத்தரவன்னியில் போய்விட்டாலும் உம்முடைய மறுமொழியை அபேக்ஷிக்காமலே எக்ஸ்பார்ட்டியாய் விசாரணைசெய்து தீர்மானிக்கப்படுமென்பதை அறிவிக்கிறார்கள்.

1907ளு ஏப்ரல்மீ 1உ நம்முடைய கையெழுத்தும் கோர்ட்டு முத்திரையும் போடப்பட்டது.

சுந்திரவரதையங்கார்,
கிராமமுன்ஸீப்.

கிரிமினல் நடவடிக்கையின் விவரிப்பு.

1. கிராம மாஜிஸ்டிரேட்டுகளுக்கு ஒரு ரூபாய்க்குட்பட்ட சொற்பத் திருட்டுக் கேஸ்களைப் பரிசீலனை செய்வதற்குச் சென்னைப்பட்டணம் 1821ளுத்திய 4-வது ரெகுலேஷன் 6-வது பிரிவினாலும்; திட்டுதல், சொற்ப சச்சரவு, சண்டை, தாக்குதல் முதலிய குற்றங்களைப் பரிசீலனைச் செய்வதற்கு 1816-ளுத்திய 11-வது ரெகுலேஷன் 10-வது பிரிவினாலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. அவ்வித கேஸ்களைக் கிராம மாஜிஸ்டிரேட்டுகள் பிராது முதல் விசாரணை முடிவுவரையில் வாய்மொழியாகவே பரிசீலனைசெய்து தீர்மானஞ் செய்யலாம் முடிவில் விசாரணையின்முடிவு சுருக்கத்தை A. பாரப்படிக்குள்ள ரிஜிஸ்டரில் எழுதிப் பூர்த்திசெய்யலாமென்றும் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஆனால் எல்லா நடவடிக்கைகளையும் வாய்மொழியாகவே நடத்தி முடிவில்மாத்திரம் A. பாரரிஜிஸ்டரைப் பூர்த்திசெய்வதென்றால் நாகரீகம் பொருந்திய இக்காலத்திற்குப் பெரும்பாலும் பொருந்ாதென்று எண்ண ஏதுவிருக்கிறது. இதை உத்தேசித்தே நாம் அபிப்பிராயப்படுகிறபடி விசாரணையின் விருத்தாந்தம் சுருக்கமாய் எழுத்துமூலமாக யிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

4. குற்றவாளிகளைத் தண்டனைசெய்யும் விஷயத்தில் குற்றவாளிகளின் செய்கை குற்றமுள்ளதென்பதை நியாயாதிபதிமாத்திரம் தெரிந்துகொண்டு குற்றவாளிக்குச் சிக்ஷை விதிப்பது போதுமானதல்ல. தெண்டனையானது குற்றவாளி தன் குற்றத்தை உணர்ந்து இனி நல்வழிப்படும்பொருட்டும் இதர ஜனங்கள் குற்றத்தையும் அதனால் நேரிடும் தண்டனையையும் அறிந்து குற்றஞ் செய்யாதிருக்கும்பொருட்டுமே நியாயவிசாரணையும் தெண்டனையும் ஏற்பட்டிருக்கிறது.

5. ஆகையால் கிராம மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் கேஸ்கள் பரிசீலனை செய்வதில் 4-வது பாராவில்கண்ட விஷயங்கள் உபயோகமாகும்படி நடவடிக்கைகளைச் சாத்தியமானமட்டில் கொஞ்சம் விரிவாய் நடத்துவது உசிதமாயிருக்கிறது,

6. அதுவிஷயத்தில் அடியிற்கண்ட விதிகளின்படி கேஸ்களைப் பரிசீலனைசெய்வது நலமாயிருக்கும்:—பிரியாதை ககஷிக்காரரால் தெளிவாய் கிராமத்தில் வழங்கும் பாஷையில் எழுதி அதில் பிரியாதி கையெழுத்திட்டு கிராம மாஜிஸ்டிரேட்டு நேரில் கொடுடவேண்டும். [illegible] எழுத்து மூலமாய்ப் பிராதுகொடுக்கச் சாத்தியப்படாத விஷயத்தில் பிராதை கிராம மாஜிஸ்டிரேட்டு தம் முன்பாகச் சொல்லச்சொல்லி வாய்மொழியாய்க் கேட்டு எழுதிக்கொண்டு அதில் பிரியாதியைக் கையெழுத்து அல்லது கைநாட்டுப் போடும்படிச் செய்யலாம்.

142384

பிராதில் எழுதவேண்டிய விஷயங்களும் நடவடிக்கைகளும்.

(a) வாதி, எதிரி, வாதிபக்கம் சாக்ஷி இவர்களுடைய பெயர், தகப்பன் பெயர், தொழில் முதலிய விபரமும், வாஸஸ்தலமும்.

(b) குற்றம்நடந்த இடமும், குற்றத்தின் சுருக்கமான [illegible]மும்.

(c) குற்றம் நடந்ததேதியும், மணியும்.

7. அப்படிப்பட்ட பிராதை பிராது செய்யப்படுவதின்மேல் அதைப் பிடிக்கும் கிராம மாஜிஸ்டிரேட்டானவர் பிராதுக்காரனைப் பிரமாணத்தின் பேரில் உடனே விசாரணை செய்யவேண்டும். அந்த விசாரணையின் ஸாரம்ஸத்தை யெழுதிக்கொண்டு அதில் பிராதுக்காரர் கையெழுத்து செய்யவேண் [illegible] அகினடியிலும் என் முன்பாக எழுதிவைத்து பூர்த்திசெய்

யப்பட்டதென்று ஸர்ட்டிபிகேட் எழுதித் தான் கையெழுத்து செய்ய வேண்டியது.

8. பிராது எழுத்துமூலமாய் செய்யப்பட்டாலும் வாய்மொழியாய்ச் சொல்லப்பட்டதின்பேரில் எழுதிவாங்கப்பட்டாலும் அந்தப் பிராதானது தன்னுடைய பரிசீலனைக்குட்பட்டதா யிருந்தாலொழிய அந்த கிராம மாஜிஸ்டிரேட்டானவர் பிராதுக்காரர்களைப் பிரமாணத்தின்பேரில் விசாரணைசெய்ய வேண்டியிருப்பதாக இதனால் நினைக்கக்கூடாது. (வரும்.)

சுகாதாரம்.

மனிதன் அனுபவிக்கத்தக்க இவ்வுலக நன்மைகள் யாவற்றிலும் சரீர சுகமே முதன்மையென்பதும், சுகவீனம் எல்லாவற்றிலும் பெரிய கேடென்பதும், யாவரும் எளிதில் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயம். நாம் சாப்பிடுகிற போஜன பதார்த்தங்களை ஜீரணிக்கச்செய்கிற ஜீரணக்கருவிகளும் போஜனத்திலிருந்து இரத்தத்தை உண்டுபண்ணி அதை தேகமெங்கும் வியாபிக்கச் செய்கிற இரத்தக்கருவிகளும் இரத்தத்தை சுத்தப்படுத்தும்படி ஆகாயத்தை யுட்கொள்ளுகிற சுவாஸக்கருவிகளும், தேகத்திலுள்ள இவைபோன்ற பல இயந்திரங்களில் ஒவ்வொன்றும் யாதொருசேதமு மடையாமல், அதற்கு குறிக்கப்பட்ட தொழிலைவருத்தமின்றி நடப்பிக்கும்பொழுது, நாம் யாதொரு துன்பத்தையும் அடையாமல் இன்பத்தைச் சுகித்து நமக்குள்ள பல அலுவல்களை யாதொரு குறைவின்றி செய்ய சக்தியுள்ளவர்களா யிருக்கிறோம். இப்படிப்பட்ட தேகநிலைமைக்குத்தான் சுகமென்றுபெயர்

இந்த தேகசவுக்கியம் அடிக்கடி பலகாரணங்களினாலே குறைகிறதும் முற்றிலும் கெட்டுப்போகிறதும் அதினால் பல வியாதிகளால் துன்பங்கள் உண்டாகுதலும், எல்லாருக்கும் தெரிந்தகாரியம். ஜீவகாருண்ணிய கடவுள் நமது சுகத்திற்கேற்ற சில பிரமாணங்களை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் அவைகளை அறிந்துகொண்டு அவைகளின்படியே நடந்துவருகிற நமக்கு போதுமான சுகமுண்டாகிறதும், அவைகளை நாம் மீறும்போது சுகவீனமும் அதினாலுண்டாகும் பலதுன்பங்கள் சேருகிறதும் கடவுளுடைய நிர்ணயம். எப்படியென்றால் ஒருவன் அளவுக்கு மிஞ்சின போஜனத்தையாவது சுகத்திற்கேலாத பதார்த்தங்களையாவது சாப்பிட்டு வருவானாகில் யாதொரு சந்தேகமின்றி தன் ஜீர்ணக்கருவிகளை சேதப்படுத்திக்கொள்வான். அல்லது அவன் அளவிற்கு மேற்பட்டகவலை முதலிய மனோமுயற்சிகளுக்கு இடங்கொடுத்தால் புத்திக்கு ஆதாரமான அவன் மூளை மிகவும் சேதப்படும். இவ்விதமாய் ஒருவன் அறிவீனத்தினால் இயற்கைப் பிரமாணங்களை மீறித் தன் தேக இயந்திரங்களில் ஒவ்வொன்றையும் எளிதில் சேதப்படுத்தக் கூடும். இப்படிப்பட்ட அறிவீனத்தினாலுண்டாகும் பயன் பலவீனங்களும் சிலவேளை துன்பங்களும் அகாலமரணமுந்தான்.

சுகத்திற்குரித்த பிரமாணங்களை மீறுகிறதினால்வருந் தீமையெப்போதும் உடனே தோன்றுகிறதில்லை. பெற்றோர்களால் நன்குப் பாதுகாக்கப்படாத பிள்ளைகளும் பாலியத்தில் தங்கள் சுகத்தைப் பேணாத வாலிபரும் கொஞ்சக்காலம் பலமும் சுகமும் உள்ளவர்களாய்க் காணப்பட்டபோதிலும் காலஞ்செல்லச்செல்ல சிறுவயதில் வியாதி பலவீனங்களுக்கென்று விதைத்தவிதைகள்

நன்கு வளர்ந்து முளைத்து அவைகளின் கனிகளாகிய பல வியாதிகளையும் சீக்கிரமாக விருத்தாப்பியத்தையும் அகாலமரணத்தையும் கொண்டுவருமென்பது நிச்சயம். பாலியத்தில் சுகத்தைப்பேணாமல் கெட்ட வழக்கங்களினால் தங்களை கெடுத்தவர்கள் முப்பது வயதாகும்பொழுதே அறுபது வயதுவந்த விருத்தாப்பியரைப் போலாகிறார்கள். அப்படியே நல்ல பழக்கங்களினால் தங்களை பாதுகாத்தவர்கள் அறுபது வயதுள்ளவர்களாயும் முப்பது வயதுள்ளவர்களுடைய பலத்தையும் சுகத்தையுமுடையவர்களா யிருக்கிறார்கள்.

ஆகையால் ஜனங்களுக்கு சுகங்கெட்டு பலவிதவியாதிகள் உண்டாகிறது பெரும்பாலும் அவர்களுடைய சொந்த தப்பிதத்தினாலேயே யன்றி வேறல்ல. மெய்தான் சிலர் பாப்பத்திலேயே தங்கள் பெற்றோர்களிடத்தி லிருந்து சிலவியாதிகளை பெற்றுக்கொள்ளுகிறதுண்டு. ஆகிலும் அந்தப்பெற்றோர்கள் சுகத்திற்கு விதிக்கப்பட்ட பிரமாணங்களைத் தங்கள் புத்தியீனத்தினால் ஒருகாலத்தில் மீறினதின்பேரில் சம்பாதித்தவியாதிகளைத்தானே தங்கள்பிள்ளைகளுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார்கள். பின்னும் ஓர் ஊரில் ஒட்டுவார் ஒட்டி விஷவியாதிகள் நடக்கும்பொழுது சுகத்தைப் பாதுகாத்து வருகிறவர்களில் சிலர் அவ்வியாதிகளுக் குட்படுகிறார்களென்பது மெய்யேயன்றாலும், சுகத்தின் பிரமாணங்களை கவனியாத அவ்வூரிலுள்ள அறிவின ஜனங்கள் அசுத்தமான இடங்களிற் குடியிருந்து தங்களைச்சுற்றி நாற்றமுள்ள குப்பைகளைக் குவித்துகட்டுக்கடையும் துர்க்கந்தமுமுள்ள அண்ணீர்குட்டங்களை உண்டாக்கி செய்து தகாத போஜனபதார்த்தங்களை பண்ணுகிறதினால் விஷ வியாதிகளை முதலாவது தங்களுக்குள் உற்பத்தியாக்குகிறார்கள். பின்பு அவைகள் ஊரெங்கும் பரவி குற்றமுள்ளோரையும் குற்றமற்றோரையும் ஏகமாய் வாதிக்கின்றன.

வட ஆற்காடு ஜில்லா கலெக்டரவர்களுடைய ஸர்க்கியூலர்.

ஏரிக்கரைகளுக்கு சமீபமாயிருக்கும் நிலங்களுக்குடையவர்களான ரயத்துகள் அவைகளின்பேரிலிருக்கும் மரங்களின் கிளைகளைவெட்டி தழையெருவுக்காக உபயோகபடுத்திக்கொள்கிறார்களென்று நோட்டீசுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மரங்களுக்கு விசேஷ கெடுதி உண்டாகும்படியான அவ்வளவு வரையில் சில சமயங்களில் செய்யப்படுகின்றது. எருவுக்குவேண்டியமட்டில் தழையை கொண்டுபோகும்வரையில் இந்த வழக்கத்தை நடத்தேரிவாலாம். மரங்களுக்கு அதிககெடுதி செய்தால் எப்படி உற்பத்தியாகும் செடிகளுக்கு கெடுதிசெய்தால் மரங்களின் செழிப்புக்கு இரண்டத்தனை அபாதம் அல்லது டிவிஷனல் ஆபீசர் இஷ்டப்படி அதிகமாய் விதிக்கப்படுகிறதோ அப்படியே செய்யப்படும்.

வியவசாய பழமொழி.

அறிவிலே விளையுமா? தெருவிலே விளையுமா?

ஆடித்திங்காக் கொல்லையும் ஆளில்லாப் பெண்ணும் வீண்.

ஆடை பயிர் அரியமே வெள்ளாமை.

ஆட்டெரம் ஓராண்டு நிற்கும், மாட்டெரம் ஆறாண்டு நிற்கும்.

ஆட்டெரு அந்த வருஷம், மாட்டெரு மறுவருஷம்.
ஆடு அப்பு ஆவாரை மூப்பு.
ஆத்து மண்ணுக்கு வேத்து மண்ணு உரம்.
இயற்கை எருவிலும் செயற்கை எரு திறம்.
ஒருவிதமண் வேறுவித மண்ணுக்கு எருவாகும்.
உரம் ஏற்றி உழவு செய்.
உரம் உதவுவது ஊரார் உதவார்.
எருசெய்வது எனத்தான் செய்யான்.
கார் ஆடு பிசானம் குழை.
காய்ந்த எரு காசுக்கு உதவாது.
குப்பை உயர்ந்தால் குடி உயரும்.
எருவுக்குத் தக்கபடி வெள்ளாமை குட்டுக்குத்தக்கபடி சண்மடல்.
குப்பைபோட்ட நிலமும் கட்டுக்கடங்கின மருமகளும் வீணுகா.
ஆடு மிதித்தால் போதும் கன்று நின்றால் போதும்.
இடையா இடையா தானியம் எங்கே என்றால் ஆட்டு முழுக்கையில் அடங்கியிருக்கிறதென்றான்.

இன்னும் பல புராதனப் பழமொழிகளை இக்காலத்து பட்டிக்காட்டுக் குடிகளும் வழங்கி வருகிறபடியால், இந்நாட்டின் முன்காலத்துக் குடியானவர்கள் காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து தக்க எருவைப்போட்டு நிலத்தைத் திருத்தி வளமாக்கி வந்தார்கள் என்பது திண்ணம். பிறகு காலமழைகள் அடிக்கடி பெய்யாமல் மோசம் செய்து குடியானவர்களைத் தரித்திர தசையில் விட்டுவிட்டபடியாலும்; விலையுயர்ந்த நல்ல நிலங்களெல்லாம் வியவசாயத்தொழில் செய்யத்தெரியாத நாடு நகரங்களிலிருக்கும் சிலதனவான்கள் கையிற் சிக்கியும்; அத்தனவான்கள் பூமியைத்தக்கபடி காலத்துக்குக் காலம் திருத்தாமலும், "செட்டிக்கும் வெள்ளாமைக்கும் ஜன்மப்பகை" என்னும் பழமொழிக்கொக்க தங்கள் பணத்தையெல்லாம் அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து லாக்க லேவாதேவியில் இரவும்பகலும் காலத்தைப்போக்கியும், கூலிக்குமாரடிக்கும் கூத்தாடிகளைப்போன்ற கூலிக்காரரான சிலகுடியானவர்களையும், வாய்க்கரிசிக்கு வழியற்றுத் தவிக்கும் சிலவாரசாகுபடிக்காரர்களையும் நம்பி தம் பூமிகளைப் பயிர்செய்விப்பதில் அவர்கள், "ஆனைவாழ்ந்தாலென்ன பூனை தாலியறுத்தாலென்ன" என்னும் பழமொழிப்படிக்கும், "கூத்தாடி பார்ப்பது கிழக்கே, கூலிக்காரன் பார்ப்பது மேற்கே" என்ற பழமொழிப் படிக்கும் தம் தம் நிலத்திலும் அதன் அருகிலும் இருக்கும் தங்கமான எருவைத்தக்கபடி உபயோகப்படுத்தாமல் கேவலம் கஞ்சிக்கும் வயிற்றுக்கும் வெற்றிலை பாக்குக்கும் விற்றும் பூமியைப் பாழாக்கி விடுகிறார்கள்.

சில குடியானவர்களுக்கு மண்ணாசை யதிகரித்து ஏராளமான பூமியைக் கொண்டிருப்பதாலும், அவ்வளவு விஸ்தீர்ணமுள்ள பூமிக்கு எருப்போடச் சக்தியற்றும் பூமியைக் கெடுக்கிறார்கள். சிலர் எருவிட்டு பூமியைப்பண்படுத்த பிரியமிருந்தும், எருவை தக்கப்படிபாதுகாத்து, நிலத்துக்கும் காலத்துக்கும் தக்க எருக்கொடுக்கும் புத்தியும்யுக்தியும்அற்றுபூமியைக்கெடுத்து விடுகிறார்கள். நாடு நகரங்களிலிருக்கும்சிலகுடியானவர்களுக்குநாள்தோறும் நகரத்தில்சேரும் குப்பைகூளங்களை வலியக்கொடுத்தாலும், வாங்கி எருவாக உபயோகப்படுத்தாமல் உபேக்ஷையாக விருக்கிறார்கள். மண்ணுலகில் எருவுகளிலெல்லாம் சிறந்த

மனுஷர் மல எருவைத்தக்கபடி சேகரித்து உபயோகப்படுத்தாமல் ஏரி, குளம், குட்டை, இட்டேரி, ரோட்டு புறங்களில் கழித்து; பார்ப்பவர்களுக்கும், நடப்பவர்களுக்கும் அசங்கியத்தையும்அசுத்தத்தையும்உண்டாக்கிவருகிறார்கள். சில குடியானவர்கள் தம்நிலங்களிலிருக்கும் ஆடுமாடுகளின் எருவையாவது தக்கபடி சேகரித்து பாதுகாமல் எருமுட்டைகளாக மாற்றிவிலைக்கு விற்றும் தாமும் அடுப்பெரித்தும் அழித்துவிடுகிறார்கள். சில சோம்பேரிக்குடிகள் தம் நிலங்களில் தங்கும் ஆடுமாடுகளின் எருவை அப்போதைக்கப்போது வெய்யிலும் காற்றும்படாத பள்ளங்கள்அல்லது எருக்குழிகளில் போட்டு காப்பாற்றாமல், போட்டவிடத்திலிருக்கவிட்டு அவைகள் வெய்யிலாலுலர்ந்து காய்ந்து கெட்டுபோகச் செய்து விடுகிறார்கள். சிலர் தம் நிலத்திற்கு இன்றியமையாத எலும்பு, பிண்ணாக்கு முதலானபெருமைபெற்ற எருக்களை யெல்லாம் வேறு நாட்டாருக்கு விற்று ஏற்றுமதிசெய்து விட்டு ஏமாந்து தயங்குகிறார்கள். இப்படிக் குடியானவர்களுடைய தரித்திரத்தினாலும், சோம்பலினாலும், அஜாக்கிரதையினாலும், அவிவேகத்தினாலும் நமது நாட்டின் நிலத்துக்குத்தக்க எருவில்லாமல் பூமிகளுடைய பெருமைகள் பாழ்த்தும், பெரும்பஞ்சங்கள் சம்பவித்தும் கணக்கற்ற குடிகள் கைலாஸஞ்சேருகிறார்கள்.

ஆட்டுமந்தை மாட்டுப்பட்டிகளை நிலத்தில் எருவுக்காக நிறுத்திவிடும் காலத்தில் சில சோம்பேரிக்குடியானவர்கள், எருநாக்கும் பூமியை முன்னுடியாக இரண்டொரு தரம் உழுது அதில் விழும் கால்நடைகளின் சாணம் நீர் முதலானவைகள் பூமியில் சுவரும்படிச் செய்தும், அந்த எருவாத்திடத்தை விட்டு மந்தையை அப்புறப்படுத்தும்போதும், அந்த எருப்போட்ட நிலத்தை உடனே உழுது அல்லது மேல் மண்ணைப்போட்டு மூடாமலும் விடுவதனால், பூமியில் விழுந்த சாணம் நீர் முதலான சத்துக்கள் சூரிய வெப்பத்தினாலும், காற்றினாலும் காய்ந்தும், பட்டுபோயும் பணமும் வீணாக்கி விடுகிறார்கள். புத்திசாலிகளான சில குடிகளோவெனில் தம் நிலங்களில் ஆட்டுமந்தைகளை அடைக்கும் முன்னமே பூமியை உழுதும், மந்தையை கிடையெழுப்பியும், அப்புறப்படுத்தும் போதும் உழுது அல்லது மண்ணைப்போட்டும் எருவை மூடிவிடுகிறபடியால், அதன் சாரத்துக்களை அதிகம் வெ[illegible] போகாமல் நிலத்துக்கு வளந்தருகின்றன. இவ்விரண்டுவித உபாயங்களை நமது குடியானவர்கள் ஆராய்ந்து ஆலோசித்து வந்தால் தங்களுக்கு வலியக் கிடைக்கும் தங்கமான எருவின் சத்தைக்கெடுத்து தம் பூமிகளைக் கெட்டுப்போகச்செய்துக் கொள்ள மாட்டார்கள்.

இவ்வளவு தானோ! சில குடியானவர்கள் [illegible] கால் நடைகளின் சாணத்தைஎருமுட்டைகளாகத்தட்டி அடுப்பில்போட்டு அழித்துவிடுகிறார்கள். ஒருஜதைமாட்டின்சாணத்தைஒருவருஷமெல்லாஞ்சேர்த்துவிராட்டி தட்டினால் 2000 முட்டைகளாகும். இதன் விலை சுமார் 6 ரூபாய் ஆகும். ஒரு ஜதைமாட்டின் சாணத்தை எருவாக்கினால் சுமார் 15 ரூபாய் கிடைக்கும். இதனால் லாபநஷ்டம்இன்னதென்று தெரிந்துகொள்ளலாம். விறகில்லையென்று சொல்லுகிறவர்கள், தம் தோட்டங்களின் நாலாபக்கத்திலும் கிளுவை, [illegible]க்காய் புளிச்செடிகளை வைத்துப் பயிரிட்டால் நல்ல வேலியுமாகும் [illegible]ாகுமே.

தமக்கும், தம் கால் நடைகளுக்கும் உபயோகப்படாமல் தோட்டத்தில் சேரும் தாள்கள், வேர்கள், தண்டுகள், இலைகளும் காய்ந்து வீணாய்ப்போவதும்

சக்கை, செட்டு, பதரு, உமி முதலானதுகளையும், தக்கபடி உபயோகப்படுத்தினால் எவ்வளவோ நல்ல எருவாகும்.

நாடு நகரங்களில் கூட்டிச்சேர்க்கும் குப்பைகளைச் சிறிதுகாலம் ஓரிடத்தில் குவியலாகக் கொட்டிவைத்திருந்தால், அவைகள் [illegible]தொடங்கி உஷ்ணமதிகரிக்க, அதிலுற்பத்தியாகும் (அமோனியா) என்னும் அமிலப்பொருளின் வாஸனையும், அது ஆகாயத்தில் ஆவியாய்ப்பறந்து போவதும் தெரியவரும். அந்த அமோனியா என்னும் அமிலம்தான் சுரேகாரம் நைட்ரிஜன் என்னும் பதார்த்தத்தையுடையசத்து. பிறகு அந்தக்குப்பையைக்கிளறிப் பார்த்தால் உள்ளே வரண்டு வெண்காளியாக விருக்கும். அது அப்படி வரண்டுவெண்காளியாவதனால் அந்தக்குப்பையிலுள்ள அமோனியம் என்னும் விலையுயர்ந்த சத்தும் போய்விட்டதென்று திட்டமாகச் சொல்லலாம். ஆனதுபற்றியே இந்நாட்டில் சில புத்திமான்களான குடியானவர்கள் தத்தம் நிலங்களில் பெரிய குழிகளைத் தோண்டியும், அதில் தமது ஆடுமாடுகளுடைய நீர், சாணம், குப்பை குச்சிகளை யெல்லாம் ஜாக்கிறதையாகச் சேர்த்துவைத்தும், அடிக்கடி தருணம் பார்த்து தண்ணீரைவிட்டு மக்கச்செய்தும், மேலே மூடிவைத்தும், அதிக உபயோகமான அமோனியாஎன்னும் நவாச்சாரசத்தை பாதுகாத்து வருகிறார்கள். (இன்னும்வரும்.)

மாடுகளுக்கு காணும் கோமாரி—வயத்தெடுப்பு.

இதற்கு அலரி வயிற்றெடுப்பு, காற்றுநோவு, பெருநோவு, என்று பல பெயர்களுண்டு. இந்த வியாதி மாட்டுக்குக்கண்டால் மாடு முதலில் நீர் நீராக கழியும், பிறகு இரத்தமும் சீதமும் கலப்புடன் கழியும், பசியற்றுப்போம்; நடுக்கம் காணும்; கண்களில் பீளைகட்டும், அதிகக் கொட்டாவியும், வியர்வையும் உண்டாகும்: இதற்கு (1) பனங்கள்ளை வாயில் வார்க்கலாம், (2) பழம்பாசியிலை, சீரகம், வெங்காயம் சேர்த்தும், இவைகளுடன் கத்தாழைச்சோறும் சேர்த்து இடித்து காடியுடன் கலக்கி வாய்க்குள் வார்க்கலாம், (3) ஆவாரங்கொழுந்து, கத்தாழைச்[illegible], வெங்காயம், சீரகத்துடன் கிலுவைஇலைக் கொழுந்துகளையும் சேர்த்து இடித்து காடியுடன் கலக்கி வாய்க்குள் வார்க்கலாம், (4) அத்திப்பட்டை, வெங்காயம், சீரகம், தேங்காய் துரும்புத்தூளைச் சேர்த்து இடித்து காடியோடு கலக்கி வாய்க்குள் வார்க்கலாம், (5) 10, 20, மொந்தை வாழைப்பழங்களை இராத்திரியில் இரண்டுபடி நல்ல எண்ணெயில் ஊறவைத்து தினத்துக்கு இரண்டு மூன்று பழங்களைத் தரலாம், (6) பழம்பாசியிலையை இடித்து மொந்தவாழைப்பழத்துக்குள் வைத்து கொடுக்கலாம்.

இப்படி மாடுகளுக்கு உண்டாகும் கோமாரி, அம்மை, சப்பைவீக்கம், கொள்ளிவீங்கு, விரிப்பு, மூட்டு அடைப்பான், மலிவெடி, தொலைமுட்டி, தேட்டாறு, நிமிர் ஏற்ற சில விசேஷ வியாதிகளுக்கும், ஆடுகளுக்கு வயிற்றெடுப்பு, துள்ளல், தொக்குநோவு என்ற வியாதிகளுக்கும் பரிகாரம் யெழுதி வரப்படும். (இன்னும் வரும்.)

இந்தியன் டிரேடிங் கம்பெனி.

லண்டனில் இந்திய வியாபாரக் கம்பெனியென்று பொருள்படும் "இந்தியன் டிரேடிங்கம்பெனி" யொன்று ஸ்தாபிக்கப்பட்

டிருப்பதாகவும் அது இந்தியாவில் தொழிலும் வியாபாரமும் விருத்தியாகும் நோக்கங்கொண்டதென்றும், இந்தக் கம்பெனி யொன்று இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும் தோன்றுகிறது. அப்படியெனில், இந்தியாவைக் குறிக்கும்போது இந்தக்கம்பெனி இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில், நாம் மெத்த சந்தோஷப்படவேண்டியதே. இந்திய சாமான்களை ஐரோப்பிய மார்க்கட்களில் கொண்டுவிடுவதும் ஐரோப்பிய நாட்டுச்சாமான்களை நமக்கனுப்புவதும் இந்தியாவுக்கு நன்மை செய்யத்தக்கதேயாகும். இப்படிச் செய்துகொண்டு ஏற்கெனவே சில ஆங்கிலேயக் கம்பெனிகள் இருந்தபோதிலும், இந்தியக்கம்பெனியொன்று இப்படிச்செய்வதற்கு ஸமானமில்லை. ஆங்கிலேயருக்கு நம்மிடத்தில் பிரியமும் ஒற்றுணர்ச்சியு மிருக்காது. நமக்கு வேண்டியவைகள் இவையென்றும் தெரியாது. கேவலம் லாபத்தைக்கருதியே தொழில் செய்வார்கள். இந்தியரானால் தேசாபிமான மிருக்கக்கூடும். நாம் இங்கேசெய்யும் பிரயத்தனங்கள் கைகூடவேண்டுமென்ற ஆசையிருக்கக்கூடும். ஆங்கிலேயருக்கு நாம் செய்யும் பிரயத்தனங்கள் கைகூடாமற் போகவேண்டுமென்கிற எண்ணம் அநேக சமயங்களில் இருப்பதாக வெளியாகின்றது. ஏனெனில் வியாபாரத்தொழில் ஆகிய இவ்விஷயங்களில் இந்தியரும் ஆங்கிலேயரும் போட்டிக்காரர்களாயிருக்கிறார்களல்லவா? ஆகையால் லண்டனில் இந்தியக் கம்பெனியொன்று ஸ்தாபிக்கப்பட்டால் நமக்கு விசேஷநன்மை யுண்டாகக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. அநேக சாமான்கள் நமக்குத் தேவையாயிருந்து லண்டனிலிருந்து தருவிக்கவேண்டியதாயிருக்கின்றன. இங்கிருந்து பல சாமான்களை யனுப்பி அவைகள் அங்கே விலைபோகுமாவென்று தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்கின்றது. சென்ற மாஸத்தில் கடப்பை ஜில்லாவில் ஸிலேட் பலகைகள் கிடைக்கக்கூடிய கல்பாறைகள் இருப்பதாகவும், அந்தக் கற்பாறைக[illegible]ல்லைவில்லையாய்ப் பெயர்த்து எடுக்கக்கூடியவைகளாயினும், அவைகளை ஸ்கூல்பிள்ளைகளுக் குபயோகமான மெல்லிய பலகைகளாக அறுப்பதற்கு ஒரு இயந்திரம் வேண்டியதென்றும் கேள்விப்பட்டோம். அப்படிப்பட்ட இயந்திரம் இந்தியாவில் கிடைக்கக் கூடியதாயில்லை. இங்கிலாண்டினின்றுதான் தருவிக்கவேண்டும். அங்கே யாரிடமிருந்து தருவிக்கலாம், அது என்ன விலையாகும், இப்படிப்பட்ட விவரங்கள் லண்டனில் இந்தியக்கம்பெனியொன்றிருந்தால் சௌகரியமாயிருக்கும். இப்போது இந்தக்கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடியால் இப்படிப்பட்ட சங்கதிகளை நாம் எளிதாய்த் தெரிந்துகொள்ளலாம்.

அந்தக் கம்பெனி உண்மையான அபிமானம் இந்தியாவில் வைத்
திருக்குமானல், அதை நடத்துவோர் சொல்வதை நமக்கு இத
மென்று நாம் நம்பலாம். இந்தக் கம்பெனி அங்கிருந்து இயந்தி
ரங்களை ஏற்றுமதி செய்வார்களென்றும், முக்கியமாய் விவசாயத்
துக்கும், தச்சன் கொல்லன் முதலிய தொழிலாளிக்கும் வேண்
டிய ஆயுதங்களை ஏற்றுமதி செய்வார்களென்றும் சொல்லுகிறார்
கள். இந்தியாவானது மகா விசாலமான முப்பத்து கோடிக்கணக்
கான ஜனத்தொகையுள்ள தேசமானதால் இங்கே செய்யப்படும்
சாமான்களுக்கு நாம் வெளிதேசங்களில் கிராக்கி தேடுவது அவ்
வளவு அவசியமில்லை. முப்பதுகோடி ஜனங்களுக்கு வேண்டாத
சாமான்கள் நாம் தற்காலம் என்னசெய்யப்போகிறோம். அவை
களைச் செய்யும்படியான வசதிகளும் சாமர்த்தியமும் நமக்கிருந்
தால் போதாது; நம்மவர்களுக்கு வேண்டாமலும் அன்னியநாட்
டாருக்கு வேண்டியனவுமாகிய சாமான்களை நாம் செய்யாமலே
இருந்துவிடலாம். ஆனல் நமது தொழில்களுக்கு வேண்டிய இய
ந்திரங்களும், கருவிகளும், பொருள்களுங்கூட அன்னிய நாடுகளி
லிருந்து வரவேண்டி யிருக்கின்றன. அம்பட்டன்கத்திகூட அன்
னியதேசத்திலிருந்து வரவேண்டியிருந்தால், மற்றகருவிகளுக்கும்
ஆயுதங்களுக்கும், இயந்திரங்களுக்கும் சொல்வானேன்? ஆகையால்
நமது தொழிற்பொருள்கள் நமது தேசத்திலேயே விற்பனையாகி
நமது தொழில்களுக்கு வேண்டிய இரும்பு சாமான்கள் மட்டும்
வெளியிலிருந்து தருவிக்கவேண்டும். ஆயினும் சிற்சில இந்தியசா
மான்கள் அன்னியநாடுகளுக்கு அனுப்பப்பட்டால் பெரும் லா
பமும் கிடைக்கக் கூடியதாயிருக்கும்போது அப்படியே அனுப்பும்
படி யிருக்கும். இப்படி அனுப்புவதிலும் வரவழைப்பதிலும் லண்
டனில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "இந்தியன் டிரேடிங்
கம்பெனி"யானது நமக்கு சகாயஞ்செய்யக் கூடியதாயிருக்கும்.
இதுவரையில் இந்தியர் லண்டனில் வர்த்தகம் செய்யக் கம்பெனி
யொன்றுஸ்தாபிக்காதிருந்தது ஆச்சரியமாயிருக்கின்றது. நமது
தேசாபிமானச் சூரரான தாதாபாய் நௌரோஜி சுமார் 50 வரு
ஷத்துக்கு முன்னுல் இம்மாதிரி கம்பெனி ஸ்தாபிக்க முயன்று
நஷ்டமடைந்துபோனர். அதுமுதல் இரண்டாவது முயற்சி
யொருவரும் செய்யவில்லை. சைனுவிலும், ஜப்பானிலும், பல
தீபாந்திரங்களிலும், இந்தியர்கள்போய் வசித்து வியாபாரம் செ
ய்து வருகிறார்கள். இங்கிலாண்டில்மட்டும் இதுவரையில் செய்ய
வில்லை. இப்போது இந்தக்கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருப்பது
இந்தியாவின் புதுக்கிளர்ச்சிக்கு மற்றொரு அடையாளம். இது

ஜெத்து அபிவிர்த்தியாக வேண்டுமென்று கோருகிறோம். இந்
தக்கம்பெனியின் விலாஸம்: "இந்தியன் டிரேடிங் கம்பெனி,"
11, & 312, வின்செஸ்டர் ஹவுஸ் (Winchester House), ஓல்ட்
பிராட் ஸ்டிரீட் (Old Broad Street), லண்டன், S. C.

போலீஸாரும் கிராம மாஜிஸ்டிரேட்டுகளும்.

போலீஸார் மாஜிஸ்டிரேட்டினுடைய அதிகாரத்திற்குட்பட்டவர்கள்
ன்று சட்டம் விதிக்கிறது. கிராமமாஜிஸ்டிரேட்டுகளையும், மாஜிஸ்டிரேட்டு
ன்று இந்த ஸந்தர்ப்பத்தில் அர்த்தம் செய்யலாமென்று சட்டத்திலுல் ஏற்
டுகின்றது. இவ்விஷயத்தை அநேக கிராமமாஜிஸ்டிரேட்டுகள் அறியாமல்
பாலீஸாரைக் கண்டு பயந்து அவர்களைத் தெய்வமாக வணங்கி வருகிறார்
ள். ஆங்கிலேய கவர்ன்மெண்டின் விர்த்திக்கு ஆதாரம் கிராமபரிபாலனம்
ன்றுப் நடை பெறுவதற்கென்றே கிராம உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்
ட்டிருக்கிறார்கள். கொலை முதலிய பெரிய குற்றங்கள் நடந்த விஷயங்
ளில் நீதிபரிபாலகர்கள் கிராம மாஜிஸ்டிரேட்டுகளுடைய சாக்ஷியத்தையே
ம்புகிறார்கள். அவ்விதமாகவே மதிப்பு வைக்கப்பட்டிருக்கிற கிராம மாஜிஸ்
ரேட்டுகளில் சிலர் ஒரு குற்றம் நடந்தவுடன் போலீஸாருக்குப் பயந்து
டவடிக்கை நடத்திவருவது வெகு விநோதமாயிருக்கிறது. "ஓடுகிறவனைக்
ண்டால் விரட்டுகிறவனுக்கு எளிது" என்கிறபடி தங்களுடைய அதிகாரம்
ன்னதென்று அறியாத சில கிராமமாஜிஸ்டிரேட்டுகளிடம் போலீஸார் தங்
ள் கைவரிசையைக்காட்டிவருகிறார்கள். அதற்குக் காரணம், சம்பந்தப்பட்ட
ிராமமுன்ஸீபுகள் தங்கள் அதிகாரவம் இன்னதென்பதையும்போலீஸாருடைய
அதிகாரமும் கடமையும் இப்படிப்பட்டதென்பதையும் தெரிந்துகொள்ளாம
லிருப்பதே. இப்பெருங் குறைவால் நேரிடும் கெடுதிகள் பல உள. அப்படிப்
பட்ட அறியாமையை அந்தக் கிராமமுன்ஸீபுகளிடமிருந்து விலக்கியவர்
அவர்களை அறிவாளிகளாக்குவதற்கு நமது காருண்ய கவர்ன்மெண்டார் அவர்
ள் சில வருஷங்களாக கர்ணங்களை வருஷத்துக்கு ஒருமுறை அங்கங்
க ஸர்வே பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி ஸர்வே கணக்குகளை கற்றுக்கொடுத்
து பரீக்ஷைசெய்து வருவதுபோலக் கிராமமுன்ஸீபுகளையும் அவ்வவ்விடங்
ளில் வருஷத்திற்கொருமுறை சேர்த்து அவர்கள் தெரிந்துகொள்ளவேண்
டிய முக்கியவிஷயங்களைக் கற்பித்துப் பரீக்ஷித்துவரில் இவ்வித பெருங்குறை
ற்றும் நிவர்த்தியாகுமென்பதிற் சந்தேகமில்லை.

சுதேச சர்க்கரை.

வடமேற்கு மாகாணங்களது முக்கியமான பட்டணங்களி லொன்
றாகிய கான்பூரில் வெள்ளைச்சர்க்கரை செய்யும் தொழில் நடந்துவருகின்ற
தென்பது யாவரும் மகிழ்ந்தவிஷயம். இதை ஐரோப்பியர்களே முதல்தொகை
போட்டு மேல் விசாரணை செய்து நடத்திவருகிறார்கள். வர்த்தாலும் நமதுதேசத்
திலேயே நடப்பதாலும் நமது ஏழைகளுக்கு ஜீவனம் கொடுப்பதாலும் இதை
அன்னியத் தொழிலாகப் பாவிக்காமல் சுதேசியத்தொழிலாகக் கருதி நம்மால்
ஆதரிக்கப்படல் தகும். இந்தக்கம்பெனிக்குச் சென்ற வருஷத்தில் பலவித
மான சங்கடங்கள் நேரிட்டனவென்றும், அவைகளெப்போதில் எப்போதும்

நேரிட்டதில்லையென்றும் தெரியவருகிறது. இந்தச் சங்கடங்களில் முக்கியமானது, வெள்ளைச்சர்க்கரை செய்யவேண்டிய இயற்கைப்பொருள்களின் அதிகவிலையொன்று, மற்றொரு சங்கடமென்ன வென்றால், அன்னியதேசங்களிலிருந்து பீட் சர்க்கரையும் கரும்புச்சர்க்கரையும் ஏராளமாகவந்து குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. ஜாவாத்தீவிலும் ஜமேக்காத்தீவிலும் கரும்பு விசேஷமாய் பயிர்செய்யப்பட்டு விசேஷமான அளவு சர்க்கரை செய்யப்பட்டது. ஐரோப்பிய தேசங்களாகிய ஆஸ்டிரியா, ஜர்மனி இவைகளிலிருந்து பீட் கிழங்கினின்று செய்யப்பட்ட சர்க்கரையும் அளவற்ற இறக்குமதி செய்யப்பட்டது. இந்த அன்னிய சர்க்கரையுடன் சுதேசி சர்க்கரை போட்டிபோட முடியாமல் அதை இந்தியாவில் செய்தவர்களுக்கு நஷ்டம் வந்திருக்கவேண்டும். வடக்கே ஐக்கிய மாகாணங்களில் கரும்புப்பயிர் செய்யப்படும் நிலம் சுமார் 1 லக்ஷம் ஏகரா விஸ்தீரணங்கொண்ட வளப்பமான நிலம். அங்கேயுண்டாகும் கரும்புச் சர்க்கரை இந்தியாவிலுண்டாகும் கரும்புச்சர்க்கரையில் சரிபாதி அளவுகொண்டது. இப்படி இருந்தும், காலத்தில் பருவமழை பெய்யாமல் கரும்பு சாகுபடி செவ்வையாய் ஆகாமல் கரும்புச்சர்க்கரை அதிகவிலைக்கு விற்றபடியால், வெள்ளைச் சர்க்கரை செய்யும் தொழில் லாபந்தராமல் போய்விட்டது. அடுத்தவருஷங்களில் பருவமழை சரியாய்ப் பெய்யக்கூடும். கரும்புச்சர்க்கரையின் விலையும் இறங்கக்கூடும். ஆனால் தற்காலம் நம்மவர்கள் ஏராளமாய் உபயோகித்துவரும் வெள்ளைச்சர்க்கரையானது அன்னிய நாட்டிலிருந்து வரவேண்டியதாகவே யிருக்கின்றது. சுதேசிய உணர்ச்சி பலத்துவந்து, அன்னிய சர்க்கரையை உபயோகிக்கக் கூடாதென்கிற கட்டுப்பாட்டோடு சில இடங்களிற் செய்யப்பட்டுவந்தும், பெரும்பான்மையான ஜனங்கள் அன்னிய சர்க்கரையில் வைத்திருக்கும் விருப்பத்தை மாற்றாமல் அதையே உபயோகப்படுத்தி வருகிறார்கள். அன்னிய சர்க்கரையில் மாட்டு எலும்பு ஸம்பந்தமிருக்கிறதென்றும், ஹிந்துக்கள் அதைத் தொடக்கூடாதென்றும், சில சுதேசிய அபிமானிகள் சொல்லி, ஜனங்கள் மனதை பேதிக்கப்பார்த்தார்கள். அப்படிபேதிப்பதால் சில காலத்துக்குப் பலன் உண்டாக்குமேயல்லாமல், எக்காலத்திலும் அன்னிய சர்க்கரையை விலக்கி சுதேசி சர்க்கரையையே நாம் உபயோகிக்கவேண்டுமானால், சுதேசி சர்க்கரை அன்னிய சர்க்கரையைப்போல மலிவாயும் சுத்தமாயும் ருசியாயுமிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் சாமானிய ஜனங்கள் சுதேசி சர்க்கரையை வாங்குவார்கள். வாங்கினால் அன்னிய சர்க்கரை அதிகமாக இறக்குமதியாகாது. இப்படிச் செய்வதில் விசேஷ கஷ்டமில்லை. கரும்புப்பயிர் செய்யும்மாதிரிகளை நம்மவர் கிருஷி ஸாஸ்திரப்படி யறிந்துகொண்டு அதிகமாக உற்பத்தியாகும்படி செய்யவேண்டும். தக்கஎருப்போட்டு நோவொன்றும் வாராமல்பாதுகாத்துதக்க முதல் கணுப்போட்டு நட்டுப் பயிர்செய்வார்களானால், கரும்புப்பயிர் விசேஷமாக உண்டாகக்கூடும். கரும்பின்சாற்றைச்சர்க்கரையாகச் செய்யும் விதத்தையும் நம்மவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். கவர்ன்மெண்டானது இந்த விஷயத்தில் கவலையெடுத்துக்கொண்டு ஜனங்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். கல்கட்டா இண்டஸ்டிரியல் கான்பரென்ஸில் சர்க்கரைசெய்யும் விதத்தைப்பற்றிச் சிலவியாஸங்கள் படிக்கப்பட்டன. அவைகளைத் தேசபாஷையில் மொழிபெயர்த்து ஜனங்களுக்குள் பரவும்படி செய்யவேண்டும். ஐக்கியமாகாணங்களில் அஸிஸ்டெண்டு டைரக்டராயிருக்கும் மகம்மதிய கனவான் தாம் கண்டுபிடித்திருக்கும் சுலபமான இயந்திரத்தைக் காசியிலும் கல்கட்டாவிலும் கொண்டுவந்துகாட்டினர். இந்த இயந்திரமோ

சுமாரான விலைக்குக்கிடைக்கக்கூடியது. அதை உபயோகப்படுத்தும்விதத்தைத் தாம் சொல்லிவைப்பதில் தடையிராதென்றும் தெரிவித்திருக்கிறார். நம்மவர் இப்படிப்பட்ட விஷயங்களில் கவனஞ்செலுத்தி ஊக்கங்காட்டவேண்டும். இந்தியாதேசத்தின் பூசாரமானது எந்தப்பொருள் வேண்டுமானாலும் அதுவிளையக்கூடியதாயிருக்க, நமது சோம்பேறித்தனத்தாலும் அறியாமையாலும் காலின்கீழ்புதைந்துகிடக்கும் பொருளைக் குனிந்து எடுத்து அநுபவித்து சுகப்படாமல் அன்னியரிட்டது பிச்சையாய் பரிதபிக்கிறோம்.

ஜனன மரண பதிவு கணக்கு.

கிராமங்களில் வைக்கவேண்டிய கணக்குகள் இன்னவையென்று "வில்லேஜ் மானுயல்" என்கிற புத்தகத்தில் ஸ்பஷ்டமாய் சொல்லியிருப்பதும் தவிர இப்போது கிராம கணக்கர்கள் எல்லாருக்கும் அனுபவத்திலே ஷை கணக்குகள் பலானவென்று தெரிந்தேயிருக்கிறது. அனேகமாய் கிராமத்திய மணியம் முனிசீபுகளுக்கும் தெரியும்.

ஷை கணக்குகளில் சிலவற்றை கிராமத்திலிருக்கும் கர்ணம் மணியகாரர்கள் தயார்செய்து மாதம் மாதம் தப்பாமல் தாலூக்கா அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டியதென்று உத்திரவு இருக்கிறது. காலஸ்திதிகணக்கு, சாகுபடி கணக்கு, ஜனனமரண கணக்குமுதலியவைகள் மாதம் ஒருதரம் நிர்ணயித்த காலத்தில் தாலூக்காவுக்கு அனுப்பவேண்டும். ஒருதாலூக்காவிலிருக்கும் யாவத்து கிராமங்களினுடைய கணக்குகள் வந்தவுடன் தாலூக்காவில் ஒன்றாய் சேர்த்து நமூனாப்படி மொத்தகணக்கு தயார்செய்து அதை மகாகனம்பொருந்திய ரிவினியூ போர்டாபீசுக்கு மேலான அதிகாரிகள் வழியாய் நிர்ணயித்த தேதியில் அனுப்பிவருகிறார்கள். ஷை கணக்கில் ஜனன மரண கணக்கு முக்கியமானது.

2. ஜனன மரண பதிவு கணக்கு:—சாதாரணமாய் குடிகளுடைய சௌக்கியத்தையும் அவர்களுடைய சுக துக்கங்களையும் விசாரித்து அவர்களுடைய க்ஷேமத்தை விருத்திசெய்வதுதான் நல்ல அரசுக்கு அஸ்திவாரமென்று எல்லா துரைத்தனத்தாருக்கும் தெரிந்தவிஷயம். குடிகளுடைய க்ஷேமத்துக்கும் அபிவிருத்திக்காகவும்தான் சட்ட நிருபணைகள் செய்வதும், போர்ட்டாபீஸ், தந்தி, ரோட்டுகள் சாலைகள் முதலிய அளவற்ற நன்மைகள் இந்த (British Government) செய்திருக்கிறார்களென்றும், இன்னம் செய்ய முயல்கின்றார்கள் என்றும் எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. "சுவற்றை வைத்து சித்திரம் எழுதவேண்டியது" என்கிற பழமொழிப்படி ஒரு துரைத்தனத்தில் பிரஜைகள் யாதொரு குறைவுமில்லாமல் சௌக்கியமாயிருந்தால் தான் அந்த துரைத்தனம் (Government) பூர்ணமாய் எல்லாவிதத்திலும் அபிவிர்த்தியடையும் என்பதற்கு ஐயமில்லை. குடிகளில்லாமல் போனால் துரைத்தனம் (Government) கிடையாது; ஆகையால் துரைத்தனத்தார் குடிகளுடைய க்ஷேமத்தை சதா கியாபகத்தில் வைத்து அவர்களை எல்லாவிதத்திலும் விருத்திக்கு கொண்டுவரவேண்டியது அரசனுடைய முக்கிய உத்தேசமும் கவனிப்புமாக விருக்கிறது. சித்திரம் எழுதுவதற்கு முன்னே கிரமமான சுவர் செய்வித்துக்கொள்ளவேணும், அதுபோல் அரசை உண்டாவதற்கு முன் குடிகளை அபிவிர்த்தி செய்துகொள்ளவேணும். குடிகளுடைய

க்ஷேமம் கவர்ன்மெண்டாருக்கு முக்கியமான அம்சம். வரப்புயர்ந்தால் நீருயரும், நீருயர்ந்தால் நிலமுயரும், நிலமுயர்ந்தால் குடி உயரும், குடி உயர்ந்தால் கோனுயர்வான் என்கிற விஷயம் எல்லாருக்கும் விளக்கமாயே யிருக்கிறது.

ஆகையாலே குடிகளுடைய க்ஷேமம் தெரியும்பொருட்டு எந்தெந்த இடங்களில் எந்தவிதமான காரணங்களால் குடிகளுக்கு ஆபத்துகள் நேரிட்டு மாண்டுபோகிறார்கள் என்றும், அவைகளை உடனே தடுப்பதற்கு என்ன உபாயங்கள் செய்யவேண்டுமென்றும், நம்மை ஆளும் ஆங்கிலேய கவர்ன்மெண்டாருக்கு முக்கிய கருத்து. அதற்காகத்தான் ஜனன மரண பதிவு கணக்கு என்று ஒரு கணக்கு பிரதிகிராமத்திலும் தயார்செய்வித்து மாதம் ஒருதடவை கிராமங்களிலிருந்து பிரிசென்சியாருக்கு தருவித்துக்கொள்ளுகிறார்கள். கலரா என்னும் வாந்திபேதி, (Bubonic Plague) என்னும் கொள்ளை வியாதி, அம்மை வார்த்தல், முதலான தொத்து வியாதிகள் கிராமத்தில் வந்திருக்கும்போது கிராமாதிகாரி உடனே பிரதிதினமும் மேலான அதிகாரிகளுக்கு அதை எழுத்துமூலமான ரிபோர்ட் செய்துவரவேண்டியது. ஷை தொத்து வியாதிகளை உடனே பார்வையிட்டு நிறுத்த மேலான அதிகாரிகளான தாசில்தார்கள், டிவிஷனல் ஆபீஸர்கள், கலெக்டர்கள், பிரதி ஜில்லாவுக்கும் ஏற்பட்டிருக்கும் (Medical staff) சிவில் ஸர்ஜன் முதலிய உத்தியோகஸ்தரைக் கொண்டு தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். அப்படியிருந்தாலும் மாதத்திற்கு ஒருதரம் ஜனன மரண கணக்குகளும், தயார்செய்து பலான வியாதியினால் பலான மரணம் நேரிட்டது என்று ஒரு மொத்தமாய் தெரிந்துகொள்ள ஷை கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தகணக்கில் அதாவது கலரா, வைசூரி, அம்மை, தற்கொலை, அகஸ்மாத்து மரணம், விஷஜந்துக்களால் நேரிட்ட மரணம், தற்செயல் மரணம் முதலியவைகளை அனேகவித காரணத்தால் நேரிடும் மரணங்களை எழுதவேண்டியதும் தவிர ஜனனங்களையும் எழுதவேண்டியது. இந்த ஜனன மரண கணக்கு கிராமத்தில் ஜாக்கிரதையாய் தயார்செய்து அனுப்பிவரவேண்டியது. கவர்ன்மெண்டாரால் 10 வருஷத்திற்கு ஒருதரம் எடுக்கும் (Census) ஜனத்தொகை கணக்குக்கு ஷை மாதாந்திர கணக்கு முக்கியமான பீடமாயிருக்கிறது. மேலும் கவர்ன்மெண்டாருக்கு லக்ஷக்கணக்காய் குடிகளிருப்பதினாலே அவர்களின் பிறப்பு இறப்பு என்னும் விஷயங்களைக் குறித்த நிலைமையை ஷை கவர்ன்மெண்டார் தெரிந்துகொள்வதற்கு ஜனன மரண கணக்கே முக்கிய சாதனமாயிருக்கிறது. ஒரு நாணயத்தொகைக்கு அதிகமாய் பிறப்புகள் இருந்தால் குடிகள் விருத்தி என்றும், ஷை தொகைக்கு அதிகமாய் மரணமிருந்தால் கெடுதி என்றும் கணக்கினால் தெரிந்துகொள்ளலாம். மரணத்தொகை அதிகமானால் அதற்கு முகாந்திரம் என்னவென்று விசாரணை செய்வித்து அதிக மரணத்திற்கு ஏதுவான இடையூறுகளை ஒழிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்வதற்கும் ஷை கணக்கு ஆதாரமாகயிருக்கிறது. ஷை ஜனன மரண கணக்கு முக்கியமான கணக்கானபடியால் ரிவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், டிவிஷனல் ஆபீஸர் முதலான உத்தியோகஸ்தர்கள் அவர்கள் ஸர்கூட்டுக்கு போகும் காலத்தில் தணிக்கைசெய்து வருகிறார்கள். முக்கியமாய் ஜமாபந்திகாலத்தில் இந்த கணக்கை தணிக்கைசெய்து வருகிறார்கள்—இது நல்ல ஏற்பாடு.

மிஸலேனியஸ்.

பாம்புகடி:—ஒருவனை விஷப்பாம்பாவது வெறிநாயாவது கடித்தால், கடித்த இடம் தவிர சரீரத்தின் மற்றப் பாகங்களுக்கும் விஷம் பரவி கடித்த காலப்ப காலத்திற்கெல்லாம் அவனுக்கு மரணமுண்டாகின்றதல்லவா, நம்மால் கூடியவரையிலும் விஷம் ஏறாமல் தடுக்கவேண்டியது. கடித்த இடத்திற்கு மேலாக ஒரு துணியைக்கொண்டாவது கயிற்றைக்கொண்டாவது கட்டிப்போடவேணும், பிறகு உடனே அடிமட்டில் கடித்த யிடத்தை கத்தியினாலே கீறிப்போடவேணும். அல்லது பழுக்கக் காய்ச்சின இரும்பை கடிவாயின் உள்ளே வைத்து எடுக்கலாம் அல்லது கொதிக்கிற தண்ணீரை காயத்திலூற்றி இரத்தம் தாராளமாய் வடியச்செய்யலாம். கால்மணி நேரத்திற்கு ஒருதரம் சாராயமும் தண்ணீரும் கலந்து வைத்து விஷம் தீண்டினவனுக்கு கொடுக்கவும். இவ்வித பரிகாரம் செய்ய முடியாவிட்டால் வாயிலாவது உதட்டிலாவது புண்ணில்லாத ஒருவன் தலைவாயை கடிவுண்டவனுடைய கடிவாயில் வைத்து நன்றாய் உறிஞ்சித் துப்பிவிடலாம்.

குஷ்டம், க்ஷயம், பாண்டு, முதலிய நோய்ப்பிணிகள் கண்டு அவுஷதத்திற்கும் தீராமல் மனிதர்கள் இறந்துவிடுவதும், மூத்த வயதினால் இறப்பதும் சகஜம். ஆனால் கலரா அம்மை முதலான அநேக தொத்துவியாதிகள், பாம்புக்கடி முதலான அகாலமரணத்தினாலும் இறப்பது ஸகஜமாக தென்படவில்லை. தகுந்த பரிகாரங்கள் செய்வதினால் அவைகளிலிருந்து சுலபமாய் மரணத்தைத் தப்பித்துக்கொள்ளலாம். இவ்வாறு தப்பவைப்பதற்காகவேதான் கவர்ன்மெண்டார் கூடியவரையிலும் முயலுகிறார்கள். தெரியாதவர்கள் கவர்ன்மெண்டாருடைய நல்ல கருத்தை அறியாமல், மெடிகல் உத்தியோகஸ்தரைக் கொண்டு கொடுக்கும் மருந்துகளையும் பரிகாரங்களையும் வாங்கிக்கொள்ளாமலும், அது விஷயமாய் ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகளை அசட்டைசெய்தும், விதிப்படி யாகுமே யல்லாமல் மனிதருடைய மருந்து என்ன செய்யும் என்று வீண்பேச்சுகள் பேசுகிறார்கள். இது மிகவும் பிசகு. கலரு, பெரியம்மை முதலிய தொத்து வியாதி கண்டு பூர்வகாலத்தில் மடிந்தவர்கள் ஆயிரக்கணக்கா யிருந்தார்கள். இப்போது அப்படி கிடையாது. இதற்குக் காரணம் தகுந்த சதுர் உபாயங்களும் பரிகாரங்களும் செய்கிறது தான் என்று எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. ஆகையால், இந்தக் கணக்கின் உபயோகத்தை அளவிடமுடியாது.

புளியம்பழம் திருடினகேஸ்.

சேலம் ஜில்லா தருமபுரியில் கிருஷ்ணய்யர் என்பவர், வெங்கட நரசிம்மய்யர் என்பவருக்குச் சொந்தமான நிலத்திலிருந்த புளியமரத்திலேறி புளியம்பழம் திருடினதாகக் குற்றம் சாட்டப்பட்டார். குற்றவாளி புளியமரம் நிற்கும் நிலமும் மரமும் தன்னுடையதென்று டிபன்ஸ் கூறினார். இந்தக்கேஸை விசாரணைசெய்த இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளி பிரஸ்தாப நிலம் தனக்குச் சொந்தமென்று நிரூபிக்க யாதொரு [illegible] யுமில்லை யென்றும், பழைய ஸர்வேயிலாவது அல்லது புதிய ஸர்வேயிலாவது [illegible] நிற்கும் நிலம் குற்றவாளியின் நிலத்தைச் சேர்ந்ததாகத் தா[illegible] வில்லை யென்றும் சொல்லி குற்றஸ்தாபனைசெய்து குற்றவாளிக்கு ரூபா 20,

அபராத தண்டனையும், அபராதம் கட்டத்தவறினால் ஒருவாரம் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள். குற்றவாளி அப்பீல்செய்து கொண்டதில் டிப்டி மாஜிஸ்டிரேட் கீழ்க்கோர்ட்டு தீர்ப்பை உறுதிசெய்தார்கள்.

குற்றவாளி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுசெய்து கொண்டார். கீழ்க் கோர்ட்டார் குற்றவாளியின்பேரில் குற்றத்தை ஸ்தாபித்ததற்குக் காரணங்கள் சொல்லவில்லை. இந்தத் தீர்மானத்தை உறுதிப்படுத்தின முதல் அப்பீல் கோர்ட்டார் குற்றவாளி ஒரு தரித்திரமான பிராமணன் என்று மட்டிலும் காரணம் காட்டியிருக்கிறார்கள். குற்றவாளி புளியமரம் நிற்கும் நிலம் தன்னுடையதென்று டிபன்ஸ்கூறியிருக்கிறார். ஆகையால் இது ஸிவில் கோர்ட்டார் பிடிக்கவேண்டியகேஸ். குற்ற ஸ்தாபனையை சட்டம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. ஆகையால் தண்டனையை ரத்துசெய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

அம்மயநாய்க்கனூர் ஜமீன்கேஸ்.

அம்மயநாய்க்கனூர் ஜமீனுக்கு தற்காலமிருக்கும் ஜமீன்தாருக்கு முன்னிருந்த ஜமீன்தாரும், இந்த ஜமீனுக்கு பட்டத்திற்குவர பாத்தியதையுடைய ஜமீன்குடும்ப ஜூனியர் மெம்பர்களும் ஷை பாத்தியதையை ஒருநாட்டுக்கோட்டைச் செட்டியாரிடம் அடமானம் வைத்துப் பணம் வாங்கிக்கொண்டார்கள். ஜமீன்தார்வகைரா கடனைத்தீர்க்கவில்லை. நாட்டுக்கோட்டைச் செட்டியார் வியாஜ்ஜியம் செய்தார். வியாஜ்ஜியம் ஸமாதானம் செய்துகொள்ளப்பட்டது. அதாவது; அம்மயநாய்க்கனூர் ஜமீன் பட்டத்திற்கு வரும் ஒவ்வொருவரும் ஜமீன் எஸ்டேட்டிலிருந்து நாட்டுக்கோட்டைச் செட்டியாரின் கடனைக்கொடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு வியாஜ்ஜியத்தைச் சமாதானம் செய்துகொண்டார்கள். அப்படியே கோர்ட்டாரும் சமாதான டிக்கிரி நாட்டுக்கோட்டைச் செட்டியாருக்குக் கொடுத்திருந்தார்கள். தற்காலம் பட்டத்திற்கு வந்திருக்கும் ஜமீன்தார், செட்டியாரின் கடனைக்கொடுக்க ஆக்ஷேபித்தார். செட்டியார் தாம்பெற்றிருந்த சமாதான டிக்கிரியை நிறைவேற்றி ஜமீனை ஜப்திசெய்தார்; ஜப்தி செய்யப்பட்ட எஸ்டேட்டை விற்பனை செய்யவேண்டுமென்றும் விற்பனை செய்யப்படும் பரியந்தம் அந்த எஸ்டேட்டை மானேஜ்மெண்டு செய்யக் கோர்ட்டார் ஒருரிஸீவரை நியமிக்க வேண்டுமென்றும் செட்டியார் மதுரை ஸப்கோர்ட்டில் மனுசெய்து கொண்டார். ஜமீன்தார் தரப்பு வக்கீல் மிஸ்டர் T. R. ராமசந்திரய்யர் இந்த ஜமீனுக்கு இனிமேல் பட்டதாரியாய் வரக்கூடிய பாத்தியதையுடையவர்கள் அந்த பாத்தியதையை அடமானம் வைப்பதற்குமுந்தி தங்களுடைய பாத்தியதையை அடமானம் வைத்திருக்கிறபடியால் அந்த அடமானம் செலாமணியாகமாட்டாது என்றும் அந்த பாத்தியதையையும் சி. பு. கோடின்பிரகாரம் ஏலம் போடமுடியாதென்றும் வாதித்தார். இந்த பெந்தகத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும் ஜமீன் குடும்ப ஜூனியர் மெம்பர்களுக்கு ஜமீனில் ஸ்வாதீனமான பாத்தியதை யிருக்கிறதென்றும் அவர்கள் பாத்தியதையை பெந்தகமும் வைக்கப்படலாமென்றும், விற்பனையும் செய்யப்படலாமென்றும் சொல்லி ஷை ஜப்திசெய்யப்பட்ட எஸ்டேட்டிற்கு ரிஸீவர் நியமிக்கும்படி ஸப்கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள். ஜமீன்தார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி (Transfer of Property Act) 6-வது பிரிவின்படியும் சி. பு. கோ. 266-வது பிரிவின்படியும் வார்ஸ் கிரமத்தில் பிந்தி எஸ்டேட்டிற்குப் பட்டத்திற்கு வரக்கூடியவர்களின் பாத்தியதை விற்பனை செய்யப்படவும், அடமானம் வைக்கப்படவும் கூடாது என்று சொன்னார்கள். இருந்தபோதிலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார் டிக்கிரியை பண டிக்கிரியாகப் பாவிக்கப்படும் பொருட்டு முதலில் செய்துகொண்ட நிறைவேற்றுமனுவைத் திருத்திக்கொள்ளும்படி உத்திரவு செய்தார்கள். ரிசீவர் நியமிக்கும்படியாக ஸப்கோர்ட்டார் செய்த உத்திரவும் அமுலிலிருக்கும்படியும் உத்திரவு செய்தார்கள்.

ஏழுவயதிற்குட்பட்ட பிள்ளை திருடினகேஸ்.

ஒருவாலிபன் ஒருகடையிலிருந்து ரூபா 1-8-0 ரொக்கம் திருடினதாக ஒரு போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டரால் குற்றம் சாட்டப்பட்டான். குற்றவாளி திருடினது சாட்சிவிசாரணையில் ருஜுப்பிக்கப்பட்டது. குற்றவாளி ஏழுவயதிற்குட்பட்டவன் என்று டாக்டர் ஸர்டிபிகேட் தாக்கல் செய்யப்பட்டது. ஏழு வயதிற்குட்பட்ட பிள்ளைகள் செய்யும் செய்கைகளுக்கு அவர்கள் ஜவாப்புதாரி யல்லவென்று சட்டம் கூறுகிறபடியால் குற்றவாளிக்குத் தண்டனை விதிக்காமல் எச்சரித்து விடுவிக்கும்படி உத்திரவு செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

மைனர் எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டுகேஸ்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒருவர் தாம் மைனராக விருந்தபோது பிராமிஸரிநோட் எழுதிக்கொடுத்துப் பணம் வாங்கிக்கொண்டார். நோட்டின்படி கடன் தீரவில்லை. ஆகவே பிராமிஸரிநோட் எழுதிவாங்கினவர் மைனர்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரதிவாதி மைனராகையால் வியாஜ்ஜியத்தை கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள். மைனர்மேஜாரிட்டி அடைந்த உடன் வாதி ஷை பிராமிஸரி நோட்டின் தொகைக்கு வேறொரு பிராமிஸரிநோட் எழுதி வாங்கிக்கொண்டார். சிலகாலம் சென்று இந்த புதுப்பிக்கப்பட்ட பிராமிஸரிநோட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி திருநெல்வேலி ஸப்கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். விசாரணையில் இந்த பிராமிஸரிநோட் மைனராக விருக்கும்போது எழுதிக்கொடுத்த பிராமிஸரிநோட்டிற்குப்பதிலாக எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிஸரிநோட்டென்று ருஜுப்பட்டது. மைனராக விருக்கும்போது எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிஸரி நோட்டின்பேரில் எழுதிக்கொடுத்தவர் மைனராக விருக்கும்போதே வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது. மைனர் மெஜாரிட்டி அடைந்தவுடன் தான் மைனராக விருக்கும்போது எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டிற்குப் பதிலாகப் புதிதாய் பிராமிஸரிநோட் எழுதிக்கொடுத்தது கடன்கொடுத்தவருக்குப் புதிய வியாஜ்ஜிய மூலத்தை உண்டுபண்ணமாட்டாதென்று சொல்லி வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்கள். வாதி ஜில்லாகோர்ட்டில் முதல் அப்பீலும் ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீலும் செய்துகொண்டதில் இரு அப்பீல் கோர்ட்டாரும் அசல் கோர்ட்டு தீர்மானத்தையே உறுதிப்படுத்தினார்கள். மறுபடியும் வாதி ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்.

தீர்ப்பு:—ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தில் பிரவேசிப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோமென்று தீர்ப்புசொல்லி ரிவிஷன் மனுவைத் தள்ளிவிட்டார்கள்.

தஞ்சாவூர்ஜில்லா கோர்ட்டாரவர்களால் அனுப்பப்பட்ட ஸர்க்கியுலர்.

ஒருவன் தன்பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தைத் தான் செய்தாகத் தன்பேரில் சந்தேகமுண்டாகாமலிருக்கும் படியாவது அல்லது அக்குற்றத்திலிருந்து தன்னை மறைத்துக்கொள்ளும் பொருட்டாவது பொய் சாக்ஷியம் சொன்னான் அல்லது பொய்சாக்ஷியம் தயாரித்தான் என்று குற்றம் சாட்டபடக்கூடாது. இ-லா-ரி. 28-அல-705.

திருச்சிறாப்பள்ளி ஜில்லா கலெக்டரவர்களால் அனுப்பப்பட்டிருக்கும் ஸர்க்கியுலர்.

இதனால் விளம்பரம் செய்வது யாதெனில், ஒருபோகசர்குபடி அறுவடையானவுடன் காலத்தில் ஸர்க்கார் ஜலத்தைக்கொண்டு எருவுக்காக அல்லது ஆடுமாடுகள் மேய்ப்பதற்காகப் பயிரிடப்படும் பயிர்களின்மீது நீர்க்கூலியானது அந்தப் பயிர்கள் முதிருவதற்கு முன்பாகவே உழுது நிலத்திலேயே மடக்கிவிட்டால் அல்லது அறுத்துவிட்டால் அல்லது ஆடுமாடு மேயவிட்டுவிட்டால் விதிக்கப்படாது. இதனால் உண்டாகிய அனுகூலம் அமுலில் இருபோக தீர்வைக்கு நஷ்டமுண்டாகும்படி கையாடப்படுமானால் கால நிர்ணயமன்னியில் ரத்து செய்யப்படும்.

ஸர்க்கியுலர்.

நாளது 1316ம் பஸலிமுதல் இந்த ஜில்லாவிலுள்ள ரிகிளாஸிவையாகாத கிராமங்களிலுள்ள ரயத்வாரி உழைப்பேரி நஞ்சை நிலங்களின் பேரிலுள்ள தீர்வையை சாதாரணநஞ்சைத்தீர்வை ரேட்டுக்குரிவினியூபோர்டாரிட உத்தரவையனுசரித்து குறைத்திருப்பதாக இதனால் எல்லாருக்கும் தெரியப்படுத்தப்படுகிறது. இவ்விதமாய்க் குறைத்தால் ஷெ நிலங்களின்சொந்தக்காரர்களுக்கு ஜலம் பாய்ச்சிக்கொள்ள ஏற்பட்டுள்ள சுதந்தரமும் அல்லது இருபோகநஞ்சை நிலங்களுக்கு ஏற்பட்ட காப்பௌண்டுசெய்யும் ரேட்டுகளும் எவ்விதத்திலும் மாறுபடவில்லை.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டரவர்களுடைய ஸர்க்கியுலர்.

சில ஏரிகளில் குடிகள் கறடு மொறடான பெரிய கற்களைப்போட்டு ஏரி கலுங்கல்களின் உச்சிமட்டத்தைத் தூக்கி விடுகிறதும் (கலுங்கல்குத்துக்கால்) மத்தியிலிருக்கப்பட்ட சந்துக்களைக் களிமண்ணைக்கொண்டு அடைப்பதும் அவர்களுக்கு வழக்கமாயிருப்பதாகவும் ஒருஏரியில் சொற்பகாலத்துக்கு முந்தி வெள்ளம் வந்தபோது ஷெ கற்கள் தாய்ச்சுவர்ப்பேரில் விழுவதனால் ஏரி ஏப்ரன் கட்டடத்தில் சந்துபிரியப்பட்டிருக்கிற சுண்ணாம்புவேலைக்குக் கெடுதியை உண்டுபண்ணி யிருப்பதாயும் அதை மராமத்து செய்வதற்காக ஸர்க்கார்செலவில் நடவடிக்கை நடத்தப்பட்டதென்றும் தென்னாற்

காடு ஸப்டிவிஷன் எக்ஸிகியூடிவ் இஞ்சினீர் அவர்கள் கலெக்டர் அவர்களுடைய நோடீசுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். கிராமக்குடிகள் உத்தரவில்லாமல் மேற்கண்டவிதமாய் ஏரிவகைரா பாசனதாரங்களிலுள்ள கட்டடங்களில் இனிப்பிரவேசித்தால் அவர்களை கிரிமினல் தரபில் பிராஸிகியூஷன் செய்யப்படும் என்றும் அவர்களுடைய நடவடிக்கையால் நேர்ந்த நஷ்டத்தை சம்மந்தப்பட்ட நபர்களிடத்திலிருந்து வசூல் செய்யப்படும் என்கிற விவரத்தையும் எல்லா கிராம நவுக்கர்களும் தங்கள் கிராமத்தில் தண்டோரா மூலமாய் இதைப் பிரசித்தம் செய்து விடவேண்டியது.

தோட்டம் அவசியம்.

ஆதியில் மானவஜாதியார் சீர்திருத்தமடைவதற்குமுன் தம் வயிற்றை வளர்க்க வேட்டையாடி வந்ததில், நிரந்தரமாகவேண்டிய உணவு அகப்படாமல் பசியால் வருந்தி, இனி தமக்கு நிரந்தரமான உணவு தேடிக்கொள்ள இயற்கையாய் அறிந்துகொண்டதொழில் வேளாண்மையேயாம். ஆகவே வேளாண்மையானது, பயங்கர காட்டுத்தன்மையான கல்லாங் காடுகளை நல்ல நிலமாகவும், காட்டுமிருகங்களைப்போல வேட்டையாடி மிருகங்களைப்போல காலங்கழித்த பசுப்பிரகிருதியான பிரஜைகளை மானுஷீகத்தன்மைக்கு மாற்றிய சிறந்த சாதனம். இது இன்றளவும் மாந்தரை மாண்டுபோகாமல் காத்துவரும் அவர்களுடைய பிராணதாரமாகவுமிருக்கிறது. இம்மண்ணுலகத்தில் மாந்தர்களுக்கு வேண்டியசாதனங்கள் யாவற்றிலும் தமது பசியை நீக்கி பிராணனைப் போஷிக்கும் சாதனத்தைவிடச் சிறந்த சாதனம் வேறுண்டோ? மாந்தர் சுகவாழ்வுக்கு வேண்டிய உணவோடு வேறு சில சாதனங்கள் இன்றியமையாதனவாக இருக்கினும் அவைகள்யாவும் ஒரு கடலில் விழும் அருவிகளும் சிற்றாறுகளும் போன்றவை; வியவசாயமோ வற்றாப் பெருங்கடலைப்போன்றது. வியவசாயமின்றி ஒன்றும் நிலை நிற்காது. இது கேவலம் மாந்தர் உணவுக்கு மாத்திரமல்ல, அவர்கள் உடுக்கவும் படுக்கவும் மற்றும் அநேக இன்றியமையாதவைகளுக்கும், அவற்றின் தொழிலுக்கும், மாத்ரு ஸ்தானமாகயிருக்கிறது. இச்சிறந்த சாதனத்தை உலகில் கோடானகோடிஜனங்கள் பிராணதாரமாகக் கொண்டிருக்கின்றனர். இதைநாடியே சீர்திருத்தம் பெற்றோர் பத்தில் ஒன்பது பாகம் திரவியத்தை, ஆதீனமாக வைத்திருக்கின்றனர்.

இதில் 20,00,00,000 கோடிஜனங்கள்உல்லாஸமாகஉழைத்துவருகின்றனர். இது கைத்தொழில் முதலானதுகளுக்கு மாத்ருஸ்தானமாக இருப்பதினால், எக்காலத்தாரும், எந்நாட்டாரும் இதில் தம்புத்திமதிகளை செலுத்தி உழைத்து வருகிறார்கள். உள்ளமறிய உழுது வேளாண்மைச்செய்யும் குடிகளுக்கு அவர்கள் உழைப்புக்குத்தக்க பலனை நிலத்தை பார்க்கிலும் கொடுக்கும் சாதனம் வேறுண்டோ? பூமியைத்தக்கபடி பண்படுத்தியுழைக்கும் வேளாளர்க்கு நன்றியறிந்தவரைப்போல அதிகலாபத்தைத்தந்து உத்ஸாகப்படுத்தும் சாதனம் வேளாண்மையைவிட வேறுண்டோ? மத்தியகாலத்தவரில் சிலர் இவ்வேளாண்மையைச் சற்று அசட்டையாக் விட்டாலும் இக்காலத்து அறிவாளிகளான குடித்தனகாரர் இந்தப்புராதனமும் பெருமை பெற்றதும் கம்பீரமுமான தொழிலில் தமது புத்திமதிகளைச் செலுத்தி விருத்தியாக்க

விடாமுயற்சி செய்துவருகின்றனர். இப்போது கைத்தொழில்கள் சொகசு செய்ய விஞ்ஞானசாஸ்திர சாதனத்தை இது விஷயத்தில் உபயோகப்படுத்தினுல் பல மடங்கு லாபத்தையும் பிறதிஷ்டையையும் பெறலாம்.

நமது கிராமங்களில் இதனுண்மையை அறிந்த சில குடிகள் நெற்பயிர் ஒன்றையே பிரதானமென்று நில்லாமல் தக்க லாபந்தரும்படியான தோட்டங்களை வைத்து விருத்தி செய்துகொண்டுவருகிறார்கள்.

ஆகையால் மேல் கண்ட தோட்டங்களுக்கு வேண்டிய புஷ்பச்செடி விதைகளும், பழந்தரும் மரங்களின் விதைகளும், புல்வகையறுக்களின் விதைகளும், வாசனைப்பூண்டுகளின் விதைகளையும் சேகரித்துவைத்து சேலத்திலும் பெங்களூரிலும் வித்து வருகிறார்கள்.

மேல் கண்ட விதைகளும் தவிர இன்னம் அநேகவிதமான குரோட்டன்சகளும் [illegible] சகாயவிலேக்கு கிடைக்கும். வேண்டியவர்கள் ஆர்டர் அனுப்பி தருவித்து [illegible]ள்ளலாம்.

T. S. V.

63, பவளக்காரத்தெரு,

சென்னை.

142384

News and Miscellaneous.

விசேஷ வர்த்தமானங்கள்.

[illegible]டுவிடப்பட்டான்.

[illegible] மெடிகல் உத்தியோகஸ்தர் ஒருவர் தமது ஜில்லா [illegible]ன்றபோது ஒரு சுதேச ஸ்திரீயை அகஸ்மாத்தாகச் சுட்டு[illegible] உடனே கிராமத்தார்கள் வந்து அந்த துரையைப் போக விடாமல் சூழ்ந்துகொண்டு அவர் தம் கையில் வைத்திருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டு [illegible]விட்டார்கள். மறுபடியும் அந்த துப்பாக்கி அக்கூட்டத் தலைவர் ஒருவனால் மத்தியஸ்தம் செய்யப்பட்டுக் கொடுத்துவிடப்பட்டது. என்றாலும் அந்த துரை இறந்துபோன ஏழை ஸ்திரீக்கு நஷ்ட ஈடாகக் கொஞ்சம் பணம் கொடுக்கும்வரையில் ஜாமீனாக அவர் கடியாரம் வாங்கிவைத்துக்கொள்ளப்பட்டது. பின்னர் துரையால் கொடுக்கப்படவேண்டிய பணம்